இனிது ரகசியம் அல்ல!

தீக்கோழி தனது தலையை மண்ணுக்குள் புதைத்துக்கொண்டு விட்டு முழு உலகமும் இருண்டு விட்டது என்று எண்ணுமாம் என்று கூறுவர்.

சுவிஸ் தூதரக ஊழியர் விவகாரத்தில் கொழும்பும் தென்னிலங்கை பக்கம் 02

பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 02 புதன்கிழமை 18.12.2019 கதிர் 43

# கோட்டாவைத் தமிழர் நிராகரித்தமை சரியே!

## இதனை அவரது செயற்பாடுகளே உறுதி செய்கின்றன என்கிறார் சுமந்திரன் எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் கோட்டாபயவுக்கு வாக்களிக்காமல் விட்டமை சரியான தீர்மானம் என்பதைத் தேர்தலுக்குப் பின்னரான அவரது செயற்பாடுகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

– இப்படிக் கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன். பக்கம் 03

## காணாமற்போனோருக்கு பொறுப்பு கோட்டாபயவே!

### அடித்துச் சொன்னது கூட்டமைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ.18

காணாமற்போனோர் விவகாரத்தில் பொறுப்புக் கூறவேண்டிய பாரிய கடப்பாடு இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் பக்கம் 04

## கூட்டமைப்புக்குள் பிளவு விரும்பத்தக்கதொன்றல்ல

### சுமந்திரன் சொல்கிறார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல. இந்தப் பிளவுகளால் மாற்றுத்தலைமை யார் பக்கம் 04

## திணறுகிறார் கோட்டா!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கு ஆளுநர் நியமனம் உட்பட தமிழ் மக்களின் பல விடயங்களில் ஜனாதிபதி கோட்டாபய திணறிக் கொண்டிருக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் பக்கம் 03

## இந்தியாவின் பங்களிப்பை விரும்புகிறது கூட்டமைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் டிசெ. 18

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வைக் காண்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியமெனத் பக்கம் 04

## கூட்டமைப்பின் பங்காளிகள் ஒன்றித்துச் செயற்பட முடிவு!

### தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

ஏதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக ஒன்றிணைந்து பக்கம் 04

## கட்சித் தலைவர் பதவி தந்தால் மட்டுமே பிரதமர் வேட்பாளராகக் களமிறங்குவேன்

### சஜித் நிபந்தனை; விட்டுக் கொடுக்க தயாராகிறார் ரணில்

கொழும்பு, டிசெ.18


கட்சியின் தலைமைப் பதவியைத் தந்தால் மட்டுமே வரும் பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராகக்களமிறங்குவேன். கட்சித் தலைமை தரப்படாவிட்டால் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்க மாட்டேன்.

– இவ்வாறு நிபந்தனை விதிக்கும் அறிவிப்பு ஒன்றை ஐ.தே. கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேதாஸ விடுத்திருக்கின்றார்.

நேற்று கொழும்பு, ஜெயவர்த்தனபுர பக்கம் 04

## ரெலோ, புளொட் தேடி வந்தாலும் கூட சேர்க்க மாட்டோம் என்கின்றார் விக்கி

### கூட்டமைப்பை உடைப்பதில்லை என்பதிலும் அவர் உறுதியாம்



(எஸ்.நிதர்ஷன்)

மருதங்கேணி, டிசெ.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து அதில் உள்ள கட்சிகளை எங்களுடன் இணைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. ஆகை பக்கம் 03

## காணாமற்போனோரின் உறவுகள் கோட்டாவின் கருத்துக்கு எதிர்ப்பு



வவுனியா, டிசெ.18

காணாமற்போனோருக்கான இறப்புச் சான்றிதழை அவர்களது உறவினர் பக்கம் 03

## யாழ்.பஸ் நிலையத்துக்குள் முதியவரை மோதியது பஸ்



யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய வளாகத்துக்குள் பஸ் மோதி முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பக்கம் 04

## மூன்று மாகாணங்களில் டெங்கு நோய் அபாயம்!

கொழும்பு, டிசெ. 18

வடக்கு உள்ளிட்ட மூன்று மாகாணங்களில் டெங்கு நுளம்பு இனப் பெருக்கம் அதிகமாக உள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. பக்கம் 03

## மணல் கொள்ளையைக் கண்டித்து ஏ-9 வீதியில் மக்கள் போராட்டம்!





கிளிநொச்சி, டிசெ. 18

கிளிநொச்சி மாவட்டத்தில் சோரன்பற்று, கிளாலி, அரத்திநகர் மற்றும் அல்லிப்பளைப் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கையைக் கண்டித்து பளைப் பகுதியில் மக்கள் நேற்றுக் காலை வீதி மறியல் போராட்டம் நடத்தினர்.

கோட்டாபய பக்கம் 04

# மணல் கொள்ளையை எதிர்த்து யாழ்.நகரில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

வடக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணிக்குப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

புதிதாகப் பதவியேற்றுள்ள ஜனாதிபதி கோட்டாபய மணல் வழித்தட அனுமதியை இரத்துச் செய்துள்ளமையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் தீவகம், அரியாலை, வடமராட்சி கிழக்கு உட்பட பல இடங்களிலும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் அதிகரித்துள்ளன. அதேபோன்று வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் பல்வேறு இடங்களிலும் இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன எனப் பல தரப்பினர்களும் தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்தி வருவதுடன் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் சட்டவிரோத மணல் அகழ்விற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தியும் பல தரப்புக்கள் இணைந்து போராட்டமொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய இன்று யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் இன்று காலை 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் கலா மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவு விழா ஆரம்பமாக இருப்பது குறிப்பிடத்தக்கது (ஐ)

## செங்குந்தா சந்தைக்கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

செங்குந்தா சந்தைக் கட்டத் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மாநகர சபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களா யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் பங்கு பற்றுவார்.

சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபை பிரதிமுதல்வர் து.ஈசன், யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான வி.மதிவதனி, அ.சுபாசினி, பா.சாந்தரூபன் மற்றும் பிரதி ஆணையாளர் அ.சீராளன் ஆகியோர் பங்குபற்றுவர். (உ)

# மணல் கொள்ளைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்

## சுமந்திரன் நேற்று அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு எதிராக வெகுவிரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

சட்ட விரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் பல இடங்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன. இது தொடர்பில் மக்கள் எம்மிடம் தெரிவித்ததற்கமைய பல இடங்களுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு மக்களுடனும் கலந்துரையாடியிருக்கின்றோம்.

பல நாள்களாக ஓரளவு குறைவாக இருந்த இந்த விடயம் புதிய அரசு வந்த கையோடு மீண்டும் தலைதூக்கியிருக்கின்றது. இதனால் பல்வேறு பாதிப்புக்களும் ஏற்படுகின்றன.

வடமராட்சி கிழக்கில் கடந்த ராஜபக்ஷ அரசால் மண் கொள்ளை மிக மோசமாக இடம்பெற்றது. அதற்கு எதிராக அந்த வேளையில் நான் ஒரு வழக்கும் கூடப் போட்டு தீர்ப்பும் சாதகமாகப் பெறப்பட்டிருந்தது.

குறிப்பாக மகேஸ்வரி நிதியம் என்ற ஒரு நிதியத்தின் மூலமாகவும் மிக மோசமான மணற் கொள்ளை செய்யப்பட்டிருந்தது. இது நீதிமன்றத்தில் நிரூபணமும் ஆகியிருந்தது. அப்படியான ஒரு செயற்திட்டம் திரும்பவும் செய்யப்படுகின்ற தாகத் தென்படுகிறது.

இது தொடர்பில் நான் அண்மையில் சில இடங்களுக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறேன். ஆகையினால் அது சம்பந்தமாக வெகுவிரைவிலே உரிய சட்ட நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்ளுவோம்–என்றார். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்களும் பண்ணும் களேபரம் இந்த இந்த விடயத்தைத் தான் நினைவூட்டுகிறது.

உடல் சுகவீனமுற்று, மனதளவிலும் பாதிக்கப்பட்டிருக்கும் அந்தப் பெண் ஊழியரிடம் மூன்று நாள்கள், முப்பது மணித்தியாலங்கள் மரதன் விசாரணை, அது பூர்த்தியடைய முன்னரே முடிவு எட்டப்பட்டமை போல அறிவிப்புகள், தகவல் வெளியீடுகள், கைது என்று பல திருவிழாக்கள், திருகுதாளங்கள்...!

இந்த நீதி விசாரணை தொடர்பாக சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் செய்தி அறிக்கைகள், தகவல் வெளியீடுகளில் வரிகளுக்கு இடையில் ஆராய்ந்தால், இராஜதந்திர சொல்லாடலில் சுவிஸின் கருத்து நிலைப்பாட்டை ஓரளவு உணரலாம்.

இலங்கையின் சட்ட, நீதிமுறைகள் சர்வதேச தரத்துக்கு இருக்கின்றனவா என்பது தொடர்பில் மேற்குலகின் கரிசனை வெளிப்பாட்டை அவற்றில் பார்க்கலாம்.

இலங்கையில் குண்டுப் பீதி இருக்கலாம், அதனால் பயணப் பாதுகாப்புக் குறித்து அவதானமாக இருங்கள் என்ற சாரப்பட்ட அமெரிக்கத் தரப்பில் இருந்து வெளியாகியிருப்பதாகக் கூறப்படும் பயண எச்சரிக்கை அறிவிப்பு இந்தக் கட்டத்தில் மிக முக்கியமானது.

சுவிஸ் தூதரக ஊழியர் தொடர்பான விடயத்தில் பொதுக் கருத்தை திசைதிருப்பித் தன்பக்கத்தை நியாயப்படுத்தித் தப்புவதற்கு அரசுத்தலைமை சட்டத்தையும், நீதியையும் எப்படி வளைக்க முயல்கின்றது என்பதை சுவிஸ் மட்டுமல்லாமல், சர்வதேச சமூகமுமே உணர்ந்து, அறிந்துகொள்ள இந்த விவகாரம் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கின்றது.

இந்த விடயத்தில் புலன்விசாரணை என்ற பெயரில் நடக்கும் திருவிழாக்கள் குறித்துத் தென்னிலங்கை ஊடகங்கள் வெளியிடும் செய்திகள், ஊடகத்துறையில் அவற்றின் 'தர்பார்' எத்தகையது என்பதை மேற்குலகிற்குப் புலப்படுத்த ஓர் அற்புதமான வாய்ப்பு.

அது மாத்திரமல்ல, யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்டவை என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித மாண்புகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விடயங்களை இலங்கை நீதிமன்றங்கள் விசாரிக்கக் கூடாது, சர்வதேச நீதி முறைமைகளின் கீழேயே அவை விசாரிக்கப்படவேண்டும் என்று தமிழர் தரப்பு தொடர்ந்து விடாமல் – விடாப்பிடியாக – வற்புறுத்தி வருகின்றமை ஏன் என்பதை சுவிஸ் மாத்திரமல்லாமல் மேற்குலகமும் மீண்டும் புரிந்து கொள்ள – அறிந்து கொள்ள – விளங்கிக் கொள்ள – சுவிஸ் தூதரக ஊழியர் விவகாரம் தொடர்பில் இங்குசுட்டிவிழும் நீதிமுறைமை நல்ல நேரடிச்சான்றுகள்.

இலங்கையில் உள்ள நீதி முறைமை குறித்து மேற்குலகம் விரைவில் சரியான தீர்மானம் ஒன்றை எடுக்கும் நிலை வரலாம் என்றே என் சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது.

★ ★ ★

வருகின்ற பொதுத் தேர்தலில் தமிழ்க் கூட்டமைப்பில் படித்த, இளைஞர்களுக்குத்தான் வேட்பாளர் பட்டியலில் முக்கிய இடம் வழங்கப்படும்.

நேற்று நடந்த கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இப்படித் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

நல்லது. அப்படி என்றால் பல தசாப்தங்களாக நாடாளுமன்றக் கதிரைகளைச் சூடாக்கிக் கொண்டிருக்கும் சம்பந்தன், மாவை போன்றோரின் நிலை என்ன என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது. இராமர் – சீதை இல்லாமல் இராமாயணமா? நிச்சயம் அவர்கள் இருப்பார்கள்.

ஏற்கனவே திட்டமிடப்பட்டுவிட்ட சிலரை வேட்பாளர் பட்டியலில் நுழைப்பதற்கு இது ஓர் உத்தி. முன்னேற்பாட்டுத் தந்திரம். அவ்வளவுதான்.

சரி. இப்படி படித்தவர்கள், இளைஞர்கள் என்ற பெயரில் காத்திரமானவரைப் பங்காளிக் கட்சிகளும் போட்டிக்குள் நுழைத்துவிட்டால் இருக்கின்றவர்களுக்கு இடம் சிக்கலாகி விடும் அல்லவா?

ஆகவே, பங்காளிக் கட்சிகளிடம் *"உங்களுக்கு இத்தனை 'சீட்' தாருங்கள் என்று கேட்காதீர்கள். நீங்கள் மனதில் வைத்திருக்கும் வேட்பாளர்களின் விவரங்களோடு வாருங்கள். இருந்து பேசுவோம். பொருத்தமானவர் என்றால் இடம் தரலாம்"*– என்று நேற்றைய கூட்டத்தில் அறிவுறுத்தல் வழங்கியிருக்கின்றார் சுமந்திரன்.

இந்த அறிவுறுத்தலை ஏற்கப் பங்காளிக் கட்சிகள் இணங்குமா? தெரியவில்லை.

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு மீண்டும் அடுத்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் கூடுகின்றது. ஆனாலும் அந்தக் கூட்டத்திலும் முக்கிய தீர்மானங்கள் ஏதும் எட்டப்படும் என நான் நம்பவில்லை. ஏனென்றால் அந்தக் கூட்டத்தில் சம்பந்தன் பங்குபற்றமாட்டார்.

இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் சம்பந்தன் வெள்ளிக்கிழமை (நாளை மறுதினம்) தனிப்பட்ட பயணமாகத் தமது மகளுடன் சென்னை பயணமாகின்றார். அவர் அடுத்த 30 ஆம் திகதிதான் கொழும்பு திரும்புவார்.

அதற்கு முன்னர் கூட்டமைப்பின் சார்பில் பெரிய அரசியல் முடிவுகள் ஏதும் எடுக்கப்படவாய்ப்புகள் இல்லை என்றே தோன்றுகின்றது.

இப்போதைய தென்னிலங்கை அரசியல் கள நிலைமையில் பெரும் அரசியல் மாற்றங்களுக்கான சூழல் இருப்பதாகவும் தெரியவில்லை.

எனினும் சென்னைக்குத் தனிப்பட்ட பயணம் என்ற பெயரில் சம்பந்தன் முன்னெடுக்கும் விஜயம் வேறு ஏதேனும் அரசியல் அதிரடி நிகழ்வுகளுக்கு கால்கோள் இட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது குறித்து நோண்டிப் பார்க்கிறேன். அறிந்தால் வாசகர்களுடன் பகிர்வேன்.

– மின்னல்–

# பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல் ஜனாதிபதி செயலகத்தில் தடை

கொழும்பு, டிசெ.18

ஜனாதிபதி செயலகத்தில் நாளாந்தம் இடம்பெறும் கலந்துரையாடல்களில் பிளாஸ்ரிக் குடிதண்ணீர்ப் போத்தல்களைப் பயன்படுத்துவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்பில் தடை செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஏனைய அரச நிறுவனங்களும் இந்த நடைமுறையைப் பின்னபற்ற வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி செயலகத்தில் நாளாந்தம் இடம்பெறும் கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புகளில் கலந்துகொள்பவர்களின் பாவனைக்காக பிளாஸ்ரிக் குடிதண்ணீர்ப் போத்தல்களை வழங்குதல் நீண்ட காலமாகவே இடம்பெற்றுவரும் வழக்கமாகும்.


இதனால் ஏற்படக்கூடிய பாரதூரமான சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, இவ்வாறு குடிதண்ணீர் போத்தல்கள் வழங்குதலை தடை செய்வதற்கும் அதற்குப் பதிலாக கண்ணாடிக் குவளைகளில் குடிதண்ணீர் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

இதனூடாக இதுவரை காலமும் ஜனாதிபதி செயலகத்தில் நாளாந்தம் உபயோகிக்கப்படும் பிளாஸ்ரிக் குடிதண்ணீர்ப் போத்தல்கள் சுற்றாடலில் ஒன்று சேர்வது பெருமளவு குறைவடையும்.

ஏனைய அரச நிறுவனங்களும் இந்த நடைமுறையை வெகுவிரைவில் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் சுற்றாடலில் ஒன்று சேரும் பிளாஸ்டிக் போத்தல்களின் அளவு பெருமளவில் குறைவடையும்.

வனவிலங்குகள் பாதுகாப்பு ஒன்றியம், புவி தோழர்கள், தம்பன்னி இயற்கை கழகம் போன்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சூழலியலாளர்களும் சுற்றாடல் நேயமிக்கவர்களும் இரண்டு நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட இந்த தீர்மானத்திற்கு பாராட்டு தெரிவித்துள்ளனர். (ஐ)

# பூஜித் ஜயசுந்தர, ஹேமசிறிக்கு தொடர்ந்தும் விளக்க மறியலில்



கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ ஆகியோர் டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் முன் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறன்று மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்காததன் ஊடாக கொலை குற்றம் புரிந்தனர் எனக் குற்றம் சுமத்தி இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தம்மைத் தமது மகளின் திருமண நிகழ்வில் பங்குபற்ற அனுமதிக்கும் படி கோரியிருக்கின்றார்.

## கோட்டாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஜனாதிபதி வெளிப்படுத்தி வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் யாழ் நகரிலுள்ள தனது அலவலகத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலுக்குப் பின்னரான சூழ்நிலை இப்போது சற்றுத் தெளிவாக வெளிப்பட ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய அரசியல் தத்துவங்களைச் சிறிது சிறிதாக வெளிப்படுத்தி வருகிறார்.

அதிலும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமாக அவர் கூறத் தலைப்பட்டிருக்கும் கருத்துக்களைப் பார்க்கின்றபோது எமது மக்கள் அவருக்கு வாக்களிக்காமல் விட்டமை மிகவும் சரியான தீர்மானம் என்பது இப்போது ஊர்ஜிதம் செய்யப்படுகின்றது.

ஆகவே, அவருக்கு ஆதரவாகச் செயற்படும் – தங்களைத் தமிழ்க் கட்சிகள் என்று சொல்லிக் கொள்கின்றவர்கள் – தங்கள் முகங்களை இப்போது எங்கே வைத்திருக்கிறார்கள் என்றுதான் தேடிப் பார்க்க வேண்டும். விசேடமாக அமைச்சரவையில் அமைச்சரவை அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கும் டக்ளஸ் தேவானந்தா தங்கள் கட்சியின் கொள்கை சமஷ்டி அடிப்படையிலான ஓர் அரசியல் தீர்வு என்று நெடுங்காலமாகச் சொல்லி வருகிறார். ஆனால் அவருடைய தலைவர், அரசின் தலைவைர், அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி கோட்டாபாய அதனை முற்று முழுதாகப் புறக்கணித்துக்கொண்டிருக்கின்றார்.

அவ்வாறு சமஷ்டி என்பதைப் புறக்கணிப்பது மட்டுமல்ல, அதிகாரப் பகிர்வு என்பதும் தேவையில்லாத ஒன்று, நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்று என்றும் அவர் கூறியுள்ளார். இது பிரயோசனமற்றது, இது செயற்படுத்த முடியாதது என்றும் திட்டவட்டமாக ஜனாதிபதி சொல்லி வருகிறார். இத்தகைய நிலைமைகள் இருக்கையில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் அதில் தான் இருக்க முடியுமா, இல்லையா என்பதை மீள் பரிசீலனை செய்யவேண்டிய நேரம் இது.

கோட்டாபய தன்னுடைய அண்ணனின் ஆட்சிக் காலத்தில் சொன்னவற்றையும் மறுத்துரைக்கிறார்.

ஆனால், போர் நடந்த காலத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 ஆவது அரசியல் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்றும், அதற்கு அப்பாலும் சென்று அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக ஆக்குவேன் என்றும் எழுத்தில் மூன்று தடவைகள் இந்தியாவுக்கு வாக்குறுதி கொடுத்தவர்.

அது மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் சபை பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கூடியபோது அவர்களுடைய இடைக்கால அறிக்கையை எடுத்துக் கொண்டு இந்தியாவுக்கு விரைந்து, அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த மன்மோகன் சிங்கிடம் அதனைக் கொடுத்து, யுத்தம் முடிந்த உடன் இதனை நான் அமுல்படுத்துவேன் என்றும் வாக்குறுதி கொடுத்தவர். முழுமையான ஓர் அதிகாரப் பகிர்வு முறையைப் பிரேரிக்கும் ஓர் இடைக்கால அறிக்கையை இந்தியாவுக்குக் கொடுத்தவர்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை முழுமையான அதிகாரப் பகிர்வின் மூலமாக நாங்கள் வழங்குவோம் என்ற வாக்குறுதியை இந்தியாவுக்கும் முழு சர்வதேசத்துக்கும் கொடுத்து அனைவருடைய உதவிகளையும் யுத்த முயற்சிக்குப் பெற்றுக்கொண்டவர்கள்தான் மஹிந்த ராஜபக்ஷவும் அவருடைய அரசும்.

மஹிந்த அரசில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றியவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ. ஆகையால் இந்த விடயங்கள் அவருக்கும் நன்றாகத் தெரிந்த விடயங்களாகவே இருக்கின்றன. ஆனால் இப்போது திடீரென்று முன்னைய தலைவர்கள் எல்லாம் அதிகாரப் பகிர்வின் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு கொடுப்போம் என்று சொன்னமை தவறான கூற்று என்றும், அது செய்ய முடியாததொன்று என்றும் அவர் சொல்வது மிகவும் வியப்பான ஒரு விடயமாக இருக்கின்றது.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ஆதரவளிக்காத எதையும் செய்ய முடியாது என இப்போது அவர் பல தடைவைகள் சொல்லிவிட்டார். அதிகாரப் பகிர்வு என்பது பெரும்பான்மையான மக்கள் இணங்கித்தான் செய்ய வேண்டும் என்பதல்ல. அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கை எழுவதே பேரினவாதத்தின் காரணத்தினால்தான்.

ஒரு நாட்டுக்குள்ளே அரச அதிகாரங்கள் மக்களிடத்தே பகிரப்படாமல் ஒரு குறித்த மையத்தில் இருக்குமாயின் பெரும்பான்மைச் சமூகத்துக்கு அது சாதகமாக இருக்கும். நிரந்தரமாக பெரும்பான்மையாக ஒரு சமூகம் இருக்கும் போது அங்கே ஜனநாயகம் சரியான முறையில் செயற்பட முடியாது. ஆனபடியினால்தான் அப்படியான நாடுகளில் அதிகாரம் பகிரப்படவேண்டும் என்று கேரப்படுகிறது.

அவ்வாறு வெவ்வேறு பிராந்தியங்களுக்கு அதிகாரம் பகிரப்படுகின்றபோது பல பிராந்தியங்களில் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் கூட ஓரிரு பிராந்தியங்களிலே அவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தினராக இருக்கலாம். ஆகையினால் அந்த எண்ணிக்கையில் சிறுபான்மை, பெரும்பான்மை என்கின்ற தோரணைகளை விலக்குகின்ற – முழுமையான ஜனநாயகத்தை அமுல்படுத்துகின்ற – ஒரு முறைமைதான் அதிகாரப் பகிர்வு முறை. அதைத்தான் சமஷ்டி என்று சொல்லுவார்கள்.

பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதற்காகத்தான் சமஷ்டி முறை செயற்படுத்தப்பட வேண்டும். இது சம்பந்தமாக 70 வருட காலமாக மாறாமல் ஒரே நிலைப்பாடாக தமிழ் மக்களின் நிலைப்பாடு இருந்திருக்கின்றது. அவ்வாறே தொடர்ந்தும் இருக்கின்றது.

கடந்த தேர்தலிலும் இப்படியான மனநோக்குடைய ஒருவருக்கு வாக்களிக்காமல் விட்டதிலிருந்தும் தமிழ் மக்கள் தங்கள் ஜனநாயகத் தீர்ப்பைக் கொடுத்திருக்கின்றார்கள். எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கிறவர்கள் அரசியல் தீர்வில் எதைக் கோருகின்றார்கள், ஒரே நிலைப்பாட்டில் இருந்து எதைச் சொல்கிறார்கள் என்பதே முக்கியமானது.

ஆகவே, ஜனாதிபதியின் இந்தக் கருத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம். திரும்பவும் அதிகாரப் பகிர்வின் மூலமாகத்தான் இலங்கையில் இனப்பிரச்சுனைக்கான தீர்வு எட்டப்பட முடியுமென்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம். ஜனாதிபதி தன்னுடைய கருத்துக்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

அதே போல நாட்டில் அடக்குமுறை அதிகரித்திருக்கிறது. கருத்துச் சுதந்திரத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. பலவிதமான அடக்குமுறைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. இவை எல்லாவற்றையும் நாங்கள் தேர்தலுக்கு முன்னதாகவே எடுத்துச் சொல்லியிருந்தோம்.

எங்கள் மக்களின் உரிமைகளைப் பொறுத்தவரையில் நாங்கள் இப்படியான அடக்குமுறைகளுக்கு இடங்கொடுக்க மாட்டோம். அப்படியான அடக்குமுறையின் மூலமாக எங்கள் சமூகத்தின் – எங்கள் மக்களின் சுயாதீனத்தைப் பாதிக்கும் எதையும் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதையும் தெளிவாக நாங்கள் சொல்லி வைக்க விரும்புகிறோம். அரசின் அடக்குமுறைக்கு துணை போகின்ற – தங்களைத் தமிழர்கள் என்று அடையாளங்காட்டிக்கொள்கின்ற – தமிழ் தலைவர்களுக்கும் நாங்கள் இதனை ஓர் எச்சரிக்கையாகச் சொல்லி வைக்க விரும்புகின்றோம்.

வரப்போகும் நாள்களில் நாட்டில் ஜனநாயகம் சவாலுக்குட்படுத்தப்படுவது தெரிகின்றது. நாட்டில் இருக்கின்ற மற்றைய முற்போக்கு சக்திகளுக்கு நாங்கள் இந்த வேளையில் ஓர் அழைப்பை விடுக்க விரும்புகிறோம். அதாவது நாட்டில் ஜனநாயக வெளி இருக்கவேண்டியது மிகவும் அத்தியாவசியமானது. அந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய தரப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்களோடு இணைந்து முழுமையாகச் செயற்படத் தயாராக இருக்கிறது.

எங்கள் தீர்வுத்திட்டம் எப்பொழுதும் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்பதுதான். ஆனால் பல தடவைகளில் நாங்கள் வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றதன் பிரகாரம் சமஷ்டி என்கின்ற ஆட்சி முறை ஒரு குறித்த முறையாக இருக்க முடியாது. அது வெவ்வேறு நாடுகளுகளிலே வெவ்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கிறது.

ஆகவே சமஷ்டி என்று நாங்கள் சொல்கின்றபோது அதன் அடிப்படைக் குணாதிசயங்கள் தென்பட வேண்டும். சமஷ்டி என்ற பெயர்ப்பலகை தேவையில்லை. ஆனால் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதைச் செய்வதற்கு தொடர்ச்சியாக எங்கள் மக்கள் சார்பாக நாங்கள் உழைப்போம். – என்றார். (ஐ-07)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் டெங்கு நோய்த் தொற்றின் பாதிப்பு அதிகமாக உள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் அநுர ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று மாகாணங்களிலும் நடப்பு ஆண்டில் இதுவரை டெங்கு நோய் தொற்றால் 90 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் டெங்கு தூய்மைப்படுத்தும் திட்டம் மேல், மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ரெலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினால் கூட்டமைப்பின் பங்காளிகளான ரெலோ, புளொட் வந்தாலும் நாம் அவர்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் நீதியரசர் சீ.வீ.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

'தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின்' ஏற்பாட்டில் இலண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி உதவியில் வடமராட்சி கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழ் மக்கள் கூட்டணியால் உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. அதன் பின்னர் ஊடகங்களுடன் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு :–

மாற்று அணி என்பது தானாவே ஏற்பட வேண்டியதொன்று. நாங்கள் வந்து ஒவ்வொருவரும் 'மாற்றுக் கூட்டணி', 'மாற்றுக் கூட்டணி' என்று கூறுவதில் நன்மையில்லை. ஆனால் இது கொள்கை ரீதியாகப் போகவேண்டிய ஒரு விடயம். கொள்கை ரீதியாக யார், யார் ஒருமித்துச் சேர்ந்து பயணிக்க முடியுமோ அவர்கள் ஒருமித்துச் சேர்ந்து பயணிக்க வேண்டும்.

தற்போது ரெலோவில் இருந்து பிரிந்து வந்தவர்கள் கொள்கை ரீதியாக எங்களுடன்தான் என்று கூறுகிறார்கள்.

இவை எல்லாவற்றுக்கும் பொதுவாக நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் நாங்கள் எல்லோரும் சேர்ந்து முன்செல்லலாம் என்ற நிபந்தனையில்தான் இப்போது இருக்கிறோம்.

ஆகவே, எங்களுடன் கருத்தொருமித்துக் கொள்கை ரீதியாக ஒருமித்துப் பயணிக்கக் கூடிய சகலரையும் நாங்கள் ஏற்றுக் கொண்டுபோகக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆனால், நான் ஏற்கனவே ஒன்றைச் சொல்லியிருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கட்சிகளாக இருப்பவர்களை அங்கிருந்து வெளியேற்றி எங்களுடன் சேர்க்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை.

ஆகவே, அவர்கள் தாங்களாவே கட்சியாக அங்கிருந்தால் அவர்கள் அங்கேயே இருக்கட்டும். நாங்கள் கொள்கை ரீதியாக ஒன்றுபட்ட மக்களைத்தான் ஒருமித்துச் சேர்த்து முன்னே சென்று கொண்டிருக்கிறோம். மாற்று அணி என்பது அது போகும் விதத்திலே மக்கள் தீர்மானிக்கும் ஒரு விடயம். எனவே அதனைப் பொறுத்திருந்து பார்ப்போம். – என்றார்.

"இதேவேளை கூட்டமைப்பிலிருந்து அதன் பங்காளிகளான ரெலோ மற்றும் புளொட் உங்களது மாற்று அணியில் இணைவதற்கு வருமிடத்து ஏற்றுக்கொள்வீர்களா?" – எனக் கேட்டதற்குப் பதிலளிக்கும் போது "நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம்" – என்றார் அவர்.

அவ்வாறு அவர்கள் வந்தாலும் நாங்கள் அதை ஏற்றுக் கொள்ளமாட்டோம். ஏனென்றால் அவர்கள் இதுவரை காலமும் கொள்கை ரீதியாக அங்கிருந்து வெளியேறாமல், இந்தத் தேர்தலுக்காக வெளியேறி வந்தால் அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் கொள்கை சம்பந்தமான அவர்களுடைய மனோநிலை பற்றி எங்களுக்குச் சந்தேகங்கள் இருக்கின்றன என்பது ஒன்று. இதற்கு அடுத்து, இரண்டாவதாக நான் ஏற்கனவே கூறியமை போன்று கூட்டமைப்பைப் பிரித்தெடுத்து அதில் உள்ள கட்சிகளை எங்களுடன் சேர்க்க வேண்டிய அவசியமும் எங்களுக்கு இல்லை. அதற்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தோம்.

ஆகவே, அவர்கள் எங்கிருக்கின்றார்களோ தொடர்ந்து அங்கேயே இருக்கட்டும். வெறும் தேர்தல் அரசியலுக்காக ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்க வந்து எங்களுடன் சேர்வதும், சேர்வதாகக் கூறுவதும் எல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாதவை கொள்கை ரீதியாக நாங்கள் சேர்ந்து பயணிக்க முடியுமா என்பதுதான் முக்கியம் – என்றார் அவர்.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வழங்குவது குறித்து சிந்திக்க முடியும். ஆனால் அவர்களை மீளக்கொண்டுவர முடியாது என்று ஜனாதிபதி கோட்டாபபய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய இந்தக் கருத்தை நேற்று முன்தினம் தன்னைச் சந்தித்த பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகப் பிரதானிகளிடம் வெளியிட்டிருந்தார்.

வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாகக் கடந்த ஆயிரத்து 32 நாள்களாக தொடர்ச்சியாகப் போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்டது.

இது ஒரு பௌத்த சிங்கள நாடு என்ற கோசம்தான் இன்று இலங்கையில் மாபெரும் தமிழ் இனப்படுகொலையை நிகழ்த்தி முடித்திருக்கிறது. எனவே கைது செய்து தண்டிக்கப்பட வேண்டியவர் சீ.வி.விக்னேஸ்வரன் ஐயா அல்லர், இனங்களுக்கிடையே உள்ள சகஜ வாழ்வைச் சிதைத்து, நல்லிணக்கத்தைக் குழப்பி, நாட்டுக்குள் மீண்டும் ஓர் இனக் கலவரத்தை நடத்தி முடிக்க அழைப்புவிடும் வியத்மக, எலிய, சிங்களலே போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களையே கைது செய்யவேண்டும்.

இவ்வாறான சம்பவங்கள் எமக்குப் புலப்படுத்தும் உண்மைகள் என்னவென்றால், நாங்கள் ஒற்றையாட்சிக்குள் இவர்களோடு சேர்ந்து வாழ முடியாது. தமிழ்த் தேசமாக சுயநிர்ணய உரிமையோடு பிரிந்து செல்வதுதான் தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பையும், இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் தரும் என்பதேயாகும் என்று வலியுறுத்தும் பதாகையை ஏந்தியவாறும் அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளைத் தாங்கியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## திணறுகிறார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் –

புதிய ஜனாதிபதி பதவியேற்ற பின்னர் மாகாணங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்து வந்தார். ஆனால் வடக்குக்கு இதுவரை ஆளுநர் நியமிக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்துக்கு ஆளுநர் ஒருவரை இன்னமும் நியமிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் புதிய ஜனாதிபதியைத்தான் நாங்கள் இப்போது பார்க்கிறோம்.

வடக்கு ஆளுநர் விடயம் உட்பட தமிழ் மக்களின் பலவிடயங்கள் சம்பந்தமாக அவர் திணறிக் கொண்டிருக்கின்றமை தெரிகிறது. ஆகவே அவர் தனக்குரிய ஒருவரை முதலில் ஆளுநராக நியமிக்கட்டும் – என்றார். (ஐ-07)

## யாழ். பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தையடுத்து அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனினும் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விபத்து ஏற்பட்ட பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கு புறப்பட்ட பஸ் வளாகத்துக்குள் இருக்கும் அலுவலகத்துக்கு முன்பாகப் பயணித்தபோது முதியவர் ஒருவரை மோதியது. சம்பவத்தையடுத்து முதியவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

பஸ்ஸை சாரதி வேகமாகச் செலுத்தி வந்ததால்தான் விபத்து ஏற்பட்டதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். அங்கு மக்கள் கூடியதால் குழப்பநிலை ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், விபத்தை ஏற்படுத்திய பஸ்ஸை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (ஐ-07)

## கூட்டமைப்புக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இன்று பலரும் தங்களுக்குள் அடிபட்டு ஒரு முடிவுக்கு வரட்டும்.

– இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்புக்குள் பிளவுகள் வருவது விரும்பத்தக்கதல்ல. ரெலோ இரண்டாகப் பிரிந்தது என்று நான் நினைக்கவில்லை. ரெலோவில் இருந்து இரண்டு பேர் பிரிந்திருக்கிறார்கள். ஆனபடியால் ரெலோ இரண்டாகப் பிரிந்தது என்று கருத்து இல்லை.

அதே நேரத்தில் பிரிந்தவர்களுக்குப் பிரிந்து போவதற்கான கருத்தும் இருக்கிறது. ஏன் பிரிந்து போகின்றார்கள் என்று கேள்வியைக் கேட்டால் அவர்களுக்கும் பதில் தெரியாது. ஆகையினால் அந்த சுயாதீனத்தை உபயோகித்து அவர்கள் பிரிந்து செல்கின்றமை குறித்து அவர்களுக்கு நாங்கள் அறிவுரை சொல்லத் தேவையில்லை.

ஆனால் நாங்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று நான் விடுத்த கோரிக்கைக்குப் பலவிதமான விமர்சனங்கள், தேவையற்ற விடயங்கள் எல்லாவற்றையும் எடுத்து ஒவ்வொருவரும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் விடுத்த அழைப்புக்கு ஒற்றுமையாக வர எங்களுக்கு விருப்பமில்லை என்று சொல்லிவிட்டால் அதுவே போதும். அதை விடுத்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவரும் வியாக்கியானம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்.

மாற்றுத் தலைமைக்கான தலைமைத்துவம் தானே என்று ஆனந்தசங்கரி சொல்லியிருக்கின்றார். ஆகவே மாற்றுத் தலைமைக்கான போட்டி அடிபிடி அவர்களிடத்தே முடிவடைய வேண்டும்.

இன்றைக்கு அவர்களிடம் 8, 10 கட்சிகள் இருக்கின்றன. அவர்கள் எல்லாருமே மாற்றுத் தலைமை என்று அடிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் அடிபட்டு யார் மாற்றுத் தலைமை என்று முடிவு கட்டட்டும். அதன் பின்பு யார் மாற்றுத் தலைமை என்பதைப் பற்றி நாங்கள் பேசலாம் – என்றார். (ஐ-07)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சஜித் 26 கோடி ரூபா கடனாளி

### ஐ.தே.க. பிரமுகர் தகவல்

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் சஜித் பிரேமதாஸ 26 கோடி ரூபா கடனாளியாகி விட்டார். சஜித்தின் தோல்விக்கு எட்டுக்காரணங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார் எஸ்.எம்.மரிக்கார் எம்.பி.

நேற்றுக் கொலன்னாவ பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் நாம் தோல்வியடைந்தமைக்கு எட்டுக் காரணங்கள் இருக்கின்றன என நான் நினைக்கிறேன். திருடர்களைப் பிடிப்போம் என ஆட்சிக்கு வந்தோம். திருடர்களையும் பிடிக்கவில்லை, மத்திய வங்கி விவகாரத்தில் சிக்கினோம். இந்த விடயத்தால் சாதாரண ஐ.தே.க. தொண்டர்கள் தான் பாதிக்கப்பட்டனர். அவர்களிற்கு யாரும் உதவவில்லை.

தொழில் வாய்ப்புக்கள் வழங்கவில்லை. சமுர்த்தி வழங்கவில்லை.

மகாசங்கத்தினரை அவமதித்துத் தூற்றினோம். பாரிய திட்டங்களை அமைத்தாலும், அதை விளம்பரப்படுத்தவில்லை. சந்தைப்படுத்தல் பற்றி பேசியபோது, ஊடகம் பற்றி தனக்கு அதிகமாக தெரியுமென வேறு பக்கம் பார்த்துக் கொண்டு சொன்னார்.

தபால் மூலம் வாக்களிப்பிற்கு முதல்நாள் சொன்ன விடயம் அனைத்தையும் சிதைத்தது.

மிலேனியம் சவால் ஒப்பந்தத்தைத் தேர்தலிற்கு நெருக்கமாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்துச் சதி செய்தார்கள்.

சிறிசேன தேர்தலில் போட்டியிட்டபோது தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் பிரதேச ரீதியான செயற்பாட்டாளர்களிற்குப் பணம் வழங்கப்பட்டது. தேனீர் அருந்த வேண்டும், சாப்பிட வேண்டுமல்லவா என்றார்கள். ஆனால் இம்முறை அப்படியெதுவும் வழங்கப்படவில்லை.

அன்பிற்குரியவர்களே! உங்கள் சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலுடன் 26 கோடி ரூபா கடனாளியாக இருக்கிறார். போலி பிரதமர் வேட்பாளரிற்கு நாம் ஏமாற மாட்டோம். – என்றார்.

## மணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு மணலைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்த பின்னர் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மணல், கிரவல் உள்ளிட்டவை மிதமிஞ்சி சட்டவிரோதமாக வருகின்றன. இதனைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

எனினும் பொறுப்பு வாய்ந்தவர்கள் நடவடிக்கை எதனையும் எடுக்காத நிலையே தொடர்ந்து வருகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்கும் மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்குக் கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்படுகின்றது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனை கண்டித்தும் மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தக் கோரியும் நேற்று முற்பகல் 10 மணியளவில் பளை நகரில் கூடிய மக்கள், யாழ்ப்பணம் – கண்டி வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மக்கள் ஏ-9 வீதியூடாக பயணித்த டிப்பர் வாகனங்களை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போரட்டக் களத்தில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடுகளும் ஏற்பட்டன.

பளைப் பொலிஸார் மக்களுடன் பேச்சுக்களில் ஈடுபட்டு மண் அகழ்வைத் தடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என உறுதியளித்தனர்.

பளை பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பொலிஸ் நிலையத்தில் பல டிப்பர் வாகனங்களை மணலுடன் பிடித்து வைத்துள்ளோம். அவற்றைக் கடத்திச் சென்றோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

எங்களுக்கு ஊர் மக்கள் ஆதரவு தாருங்கள். நாங்கள் சேர்ந்தே சட்ட விரோத மணல் அகழ்வை நிறுத்துவோம். சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளை பொலிஸாரின் வாக்குறுதியை அடுத்து மக்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டமையுடன் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பரமோதயன் ஜெயராணிக்கு மனு ஒன்றையும் கையளித்தனர்.

அத்துடன் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மீண்டும் இடம்பெறும் பட்சத்தில் தாங்கள் தொடர்ந்தும் போராடுவார்கள் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தப் போராட்டத்தில் பொது மக்களுடன் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அத்தகைய உதவியை இந்தியா செய்யுமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவிக்கையில்–

இந்திய உதவியினால்தான் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தவேளையில் கூட 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முற்று முழுதாகப் பூர்த்தி செய்யவில்லை என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருந்தோம்.

அப்போதைய தேர்தலிலும் நாங்கள் போட்டியிடாமல் இருந்தமைக்கான காரணமும் அதுதான். இந்தியா அந்த நிலைப்பாட்டை முழுமையாக ஏற்றிருக்கிறது. ஆனபடியால் தான் இந்திய நிலைப்பாடு எப்பொழுதுமே 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது மட்டுமல்ல, ஒரு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு முறை செயற்படுத்த வேண்டுமென்பதாக இருந்திருக்கின்றது.

இதனடிப்படையிலையே முதலாவது சந்திப்பின்போது இந்திய நிலைப்பாடு என்ன என்பது சம்பந்தமாக இந்தியப் பிரதமரினால் இலங்கை ஜனாதிபதி கோட்டாபயவுக்குத் தெட்டத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இலங்கை ஜனாதிபதியை இந்தியாவுக்கு வரவழைப்பதற்கான அழைப்பிதழைக் கொடுப்பதற்காகக் கொழும்பு வந்த இந்திய வெளிவிவகார அமைச்சரும் கூட அந்தக் கருத்தைச் சொன்னார் என உத்தியோகபூர்வமாக இந்தியா அறிவித்திருக்கிறது.

ஆகவே இந்திய நிலைப்பாட்டை நாங்கள் வரவேற்கிறோம். தொடர்ச்சியாக இந்தியா அந்த விதத்தில் உதவி செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இரு நாடுகளுக்கிடையிலான ஒரு சர்வதேச ஒப்பந்தமாக இந்திய – இலங்கை ஒப்பந்தம் இருக்கிறது. அதனடிப்படையிலே இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காண்பதற்கு இந்தியாவின் பங்களிப்பு அத்தியவசியமான ஒன்றாக இருக்கின்றது – என்றார். (ஐ-7)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஷவையே சாரும் எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்டது எனச் சொல்லி தப்பிக் கொள்வதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்த போதுதான் அனைவரும் யுத்தத்தின்போது காணாமலாக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டிருந்தவர்களாக இருக்கின்றனர். ஆகவே அதற்காகப் பொறுப்புக் கூறவேண்டியமை இன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத்தான் சாரும்.

யுத்த காலத்தில் பலர் காணாமல்போயிருக்கிறார்கள் என்று சொல்வது ஒரு கூற்று. ஆனால் யுத்தம் முடிவடைந்த கையோடு யுத்த சூழ்நிலைகளில் இருந்து வெளிவருகின்ற மக்கள் அரச அறிவிப்பின் காரணமாகத் தங்கள் இளையவர்களை அரச படையினரிடையே பாரங்கொடுத்தது வேறொரு விடயம்.

அது காணாமற்போன விடயம் அல்ல. அவர்களிடத்தே சரணடைவதற்குக் கொடுக்கப்பட்டவர்கள் எங்கே என்று தெரியாத சூழ்நிலை இருக்கிறது. தேர்தலுக்கு முன்னர் இந்தக் கேள்வியை அவரிடம் கேட்டபோது அவர் மழுப்பினார். எதிர்காலத்தை நோக்கி மட்டும் பார்ப்போம் என்றும் சொன்னார்.

அத்தோடு பிற்காலத்தை நோக்கி ஏன் பார்க்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்குப் பதில் சொல்ல முடியாமல் திக்குத் திணறியமையை நாங்கள் பார்த்தோம். ஆனால் அவர் அதற்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

அரசியல் மயப்படுத்தல் என்பது வேறு விடயம். எல்லா விடயங்களும் அரசியல் மயப்படுத்தப்படும். ஆகையால் நாங்கள் கேட்கின்ற கேள்விக்கு பதில் அதுவல்ல. உங்களிடத்தில் பாரங்கொடுக்கப்பட்டவர்கள், உங்களிடம் சரணடைந்தவர்கள் எங்கே என்று கேட்டால் அதற்குச் சரியான பதிலைச் சொல்லவேண்டுமே தவிர, இது அரசியல் மயப்படுத்தப்பட்ட கேள்வி என்று சொல்லித் தப்பிக் கொள்வதற்கு நாங்கள் இடங்கொடுக்கமாட்டோம் – என்றார். (ஐ-07)

## கட்சித் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டேயில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கட்சியின் தலைமைப் பதவி இல்லாமல் கட்சியின் பிரதமர் பதவி வேட்பாளர் நியமனம் எனக்கு வேண்டாம். நான் நிபந்தனைகளுக்கு அடிபணிபவன் அல்லன்.

கட்சியின் பெரும்பான்மையினர் விரும்பினால் நான் கட்சித் தலைமைப் பதவியை ஏற்பேன். அதற்காகக் கட்சித் தலைமைப் பதவியை நான் கைபற்ற முயல மாட்டேன். அத்தோடு கட்சியை உடைக்கவும் நான் உடன்படேன் – என்றார் சஜித்.

இதேசமயம் ஐ.தே.கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பல்கலைக்கழக மாணவர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க "நான் எக்காலமும் ஐ.தே. கட்சியின் தலைவராக இருக்க முடியாது . அதனால்தான் புதிய தலைமைத்துவத்தை உருவாக்க நான் நடவடிக்கை எடுக்கின்றேன். ஆகவே ஐ.தே.கவினர் எல்லோரும் ஒன்று சேர்ந்து நின்று எதிர்காலம் குறித்துத் திட்டமிட வேண்டும்" – என்று அவர்களிடம் கூறினார். (உ)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுவது என்று பங்காளிக் கட்சிகளின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தி பிளவுபடாமல் செயற்படவேண்டும், அவ்விதமான ஒற்றுமையே இன்றைய காலத்தில் அவசியம் என்றும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே கூட்டமைப்பின் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்பின் பெயரில் செயற்படும் மூன்று கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகியனவற்றின் தலைவர்களும் ஏனைய உறுப்பினர்களும் நாடாளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக கூடிப் பேச்சு நடத்தினார்கள்.

மிகவும் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் இடம்பெற்றன. ஒருமித்து – ஒற்றுமையாக – ஒன்றிணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்குவதென்று முடிவு எடுக்கப்பட்டது. மேலதிகமான கருமங்கள் என்ன விதமாகக் கையாளப்பட வேண்டுமென்பது பற்றியும் பேசப்பட்டது.

உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு எதிர்வரும் நாள்களில் மீண்டும் கூடி ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேர்தலை எதிர்நோக்குவது என்ற முடிவு எடுக்கப்பட்டது.

தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தி – தமிழ் மக்கள் பிளவுபடாமல் ஒன்றாகக் கூடி தங்களது பலத்தை இந்தத் தேர்தல் மூலமாக வெளிக்கொணரவேண்டுமென்பதே எங்களது கருத்து. இன்றைய காலகட்டத்தில் அவ்விதமான ஒற்றுமை அத்தியாவசியம்.

ஓர் அரசியல் தீர்வைப் பெறுவதற்கும் ஏனைய கருமங்களைக் கையாள்வதற்கும் தமிழ் மக்கள் ஒருமித்து – ஒற்றுமையாக ஒரு குறிப்பிட்ட கட்சியின் பின்னால், அவர்களுக்காக நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்த கட்சியின் பின்னால், அவர்களுக்காகச் செயற்படக் கூடிய ஒரேயொரு கட்சியின் பின்னால் நிற்க வேண்டியது அத்தியாவசியம் என்று எமது உறுப்பினர்கள் கூறினார்கள்.

அதுதான் தமிழ் மக்களுடைய கருத்து என்பதிலும் ஐயம் இருக்க முடியாது. ஆனபடியால் நாங்கள் மீண்டும் விரைவில் கூடி ஏனைய கருமங்கள் சம்பந்தமாக முடிவுகளை எடுப்போம். அவை மக்களுக்கும் அறிவிக்கப்படும் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## தமிழரசின் வரலாற்றுப் பிறப்பு

இலங்கையில் மிக மூத்த, நீண்ட பாரம்பரியமும், வரலாறும் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவு இன்றாகும்.

வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றிருக்கும் கட்சிகளில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியே வயதில் மூத்த நிலையில் இருந்தாலும் –

அதிலிருந்து பிரிந்து உருவானதே இலங்கைத் தமிழரசுக் கட்சி எனினும் –

வயதால் சில வருடங்கள் பிந்திய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியே அதிகளவில் தமிழர்களின் அரசியலிலும், செயற்பாடுகளிலும் பங்களிப்புச் செய்து தாக்கம் செலுத்தி வந்திருக்கின்றது என்பது கண்கூடு.

அந்தக் கட்சி எழுபது ஆண்டுகளை நிறைவு செய்யும் இன்றைய நாளில் அதன் வரலாற்றுப் பிறப்பாக்கத்துக்குக் காரணமான முக்கிய சூழமைவு குறித்துச் சிந்திப்பது பொருத்தமானதாகும்.

1948 இல் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கி விட்டு பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேறியதும் சிங்கள, பௌத்த பேரினவாதம் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கியது.

கொடிய சிங்கள, பௌத்த பேரினவாதத் தாக்குதலில் நமது தமிழ்ச் சகோதரர்களான மலையகத் தோட்டத் தொழிலாளர்களே முதல் களப்பலியாகி வீழ்ந்தார்கள்.

இந்தத் தீவின் சுபீட்சத்துக்காகவும் பொருளாதார எழுச்சிக்காகவும் மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்து, தங்கள் வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தித் தம்மையே ஆகுதியாக்கிய சுமார் பத்து லட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது.

சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக மோசமான அநீதியாகக் கருதப்படும் குடியுரிமைச் சட்டம் அந்தப் பெரும் கொடூரத்தைப் புரிந்தது.

இதன் மூலம் நமது மலையகச் சகோதரர்களின் அடிப்படை உரிமை வல்வந்தமாகப் பறிக்கப்பட்டது. *'நாடற்றோர்'* என்ற இழிநிலைக்கு அவர்கள் தரம் இறக்கப்பட்டனர்.

அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவம் *'அடாவடித்தனமான'* சட்டத்தின் மூலம் பறிக்கப்பட்டது. அவர்களுக்கு நாடாளுமன்றக் கதவுகள் மூடப்பட்டன.

இந்தக் குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், ஆக 95 உறுப்பினர்களை மட்டும் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு உறுப்பினர்கள் இருந்தனர். இந்தக் கொடுங்கோன்மைச் சட்டத்தை, பெரும்பான்மையோரின் முடிவே தீர்மானம் என்ற ஜனநாயகக் கேலிக் கூத்தின் அடிப்படையில் சிங்கள, பௌத்த பேரினவாதம் நிறைவேற்றி நடைமுறைப்படுத்திய பின்னர் நடந்த அடுத்த பொதுத் தேர்தலில் – 1952 இல் – ஆக ஒரேயொரு நாடாளுமன்றப் பிரதிநிதியையே அந்த மக்களால் தெரிவு செய்ய முடிந்தது.

அத்துணை தூரம் கொடூரமான சட்டம் ஒன்று சுதந்திர இலங்கையின் முதல் நடவடிக்கையாகப் பேரினவாதிகளினால் முன்னெடுக்கப்பட்டபோதுதான் அந்த வரலாற்றுக் கொடூரத்துக்கு எதிராக முகிழ்ந்தது – பிறப்பெடுத்தது – இலங்கைத் தமிழரசுக் கட்சி.

இலங்கைத் தீவில் சுதந்திரம் கிடைத்தவுடன் இலங்கையின் நாடாளுமன்றம் பெரும்பான்மைக் கொடுங்கோன்மையின் கருவியாகியது என்றும், அங்கு இனைவாதமே அரசோச்சியது என்றும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களே அங்கு யாக்கப்பட்டன என்றும் மதியுரைஞர், தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் குறிப்பிடுகின்றார்.

*"இந்தக் குடியுரிமைச் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. கேடுகெட்ட இந்தச் சட்டங்களின் மொத்த விளைவுகள் மிகப் பாதகமானவையாக அமைந்தன. அவை இத்தொழிலாள மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மோசமாக்கின. நாடற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட ஏறத்தாழ பத்து லட்சம் மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களிலோ, தேசியத் தேர்தல்களிலோ பங்கெடுக்க முடியவில்லை. அரச துறைகளிலும், தனியார் துறைகளிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டது. நிலம் வாங்கும் உரிமை மறுக்கப்பட்டது. எவ்வகை வர்த்தகத்தில் ஈடுபடும் உரிமையும் மறுக்கப்பட்டது. இத்தகைய நாடற்ற நிலை இந்தத் தொழிலாளர் சமுதாயத்தை – அதுவும் நாட்டின் முதன்மையான பாட்டாளி வர்க்கமாகத் திகழ்ந்த ஒரு சமூகத்தை – உரிமை பறிக்கப்பட்ட, மனிதம் சாகடிக்கப்பட்ட மக்களாக ஆக்கியது. இதனால் இம்மக்கள் இழிவுபடுத்தப்பட்டவர்களாக விரக்தியடைந்து, நம்பிக்கையிழந்து தங்கள் பெருந்தோட்ட இருட்டறைக்குள் முடங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்"* என்கின்றார் மதியுரைஞர் பாலசிங்கம்.

இந்தக் குடியுரிமைப் பறிப்புச் சட்ட விடயங்களில் அதிருப்தி ஏற்பட்டமையினாலேயே காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை 1949 டிசெம்பர் 18 ஆம் திகதி – இன்றைக்கு 70 ஆண்டுகளுக்கு முன்னர் – ஆரம்பித்தார் தந்தை செல்வா.

*"இலங்கையில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபகத்தை அமைக்க வேண்டும் எனும் தனி நோக்கத்துக்காக நாங்கள் எல்லோரும் இங்கு ஒன்று கூடியிருக்கின்றோம்."* என்று கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தந்தை செல்வா கூறியமை இன்றும் நிறைவேற்றப்பட வேண்டிய தேவையாகத் தொடர்வதும், அந்தப் பணியும் பொறுப்பும் அதனை ஏற்றுக் கொண்ட தமிழரசு மீது தொடர்ந்து சுமத்தப்பட்டுள்ளது என்பதும் அதன் தலைவர்கள் மறக்கக் கூடாத விடயங்களாகும்.

# முல்லை மாவட்டத்திலும் மணல் கொள்ளை தீவிரம்





முல்லைத்தீவு, டிசெ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சட்டவிரோதமான முறையில் மணல் கொள்ளையர்களால் மணல் அகழ்வு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மணல் வாகன வழித்தட அனுமதி அண்மையில் நீக்கப்பட்டது. அதாவது மணலை ஏற்றிக் கொண்டு செல்வதற்கான அனுமதி பத்திரம் தேவையில்லை என்ற அறிவிப்பு அரசால் வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து குறிப்பாக இரவு நேரங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் பல்வேறு பகுதிகளில் மணல் கொள்ளையர்களால் உழவு இயந்திரங்கள் மூலம் மணல் ஏற்றப்பட்டு களவாகக் கொண்டு செல்லப்படுகின்றது .

அளம்பில் பகுதியில் உப்புமாவெளி பிரதேசம் அதனை அண்டிய கடற்கரையோரமாக உள்ள மணல் திட்டுகள் இரவோடு இரவாக கனரக இயந்திரங்கள் மூலம் அகழப்பட்டு கடத்தப்படுவதாக பிரதேச மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்தக் கொள்ளையர்களின் நடவடிக்கையை பொலிஸார் அறிந்திருந்தும் அவர்கள் மணல் கொள்ளையர்களிடம் இருந்து கையூட்டு பெற்றுக் கொண்டு இந்த நடவடிக்கையைக் கண்டும் காணாமல்விட்டுள்ளனர் எனப் பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர் .

இந்த மணல் அகழ்வு தொடருமேயானால் குறித்த உப்புமாவெளி, உடுப்புக்குளம் கிராமங்களுக்கு அரணாக – கடல் உட்புகாதவாறு இருக்கும் இந்த மண் திட்டுகள் விரைவாக அழிந்துபோகும் அபாயம் எழுந்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

# திருமலை விபத்தில் ஆறு பேர் படுகாயம்



திருமலை, டிசெ. 18

திருகோணமலை – 94ஆம் கட்டைப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 1990 அம்புலன்ஸ் வண்டி வான் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பலகாமம் பொலிஸ் நிலையத்துக்குச் சொந்தமான 1990 அம்புலன்ஸ் வண்டியில் நோயாளியொருவரை கந்தளாய் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும்போது திருகோணமலையை நோக்கிச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த விபத்தில் அம்புலன்ஸ் சாரதி, உதவியாளர் மற்றும் நோயாளி மற்றும் அவரது பாதுகாவலர் ஆகிய நால்வரும் படுகாயமடைந்துள்ள நிலையில் வானில் பயணம் செய்த இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

விபத்தில் காயமடைந்த 6 பேரும் தற்போது கந்தளாய் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் கந்தளாய் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# லைசன்ஸுக்கு மருத்துவச் சான்றிதழ் பெறுவதில் மக்கள் பெரும் நெருக்கடி



யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான மருத்துவச் சான்றிதழ் வழங்கும் நடைமுறையில் மாற்றத்தை கடைப்பிடிக்க முடியாதா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மாவட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அனைவரும் மாவட்டச் செயலகத்துக்கு அண்மையிலுள்ள ஒரேயொரு இடத்திலேயே மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டியுள்ளது.

இதனால் பல்வேறு நெருக்கடிகள் எதிர்நோக்கப்படுகின்றன. அதிகாலை இரண்டு மணியளவிலேயே மக்கள் வருகை தந்து வரிசையில் நிற்கின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் உட்பட தூரப் பிரதேசங்களில் இருந்து வருகை தருவோர் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த விடயத்தில் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

## நாளை 19.12.2019 - வியாழக்கிழமை

நட்சத்திரம்: உத்தரம் மரண மு.இ.11.47 வரை
திதி : அட்டமி மு.இ.10.19
இராகுகாலம் : 01.53 – 03.23
சுப நேரம் : 07.53 – 09.23

# பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப்புக்கு தேசத் துரோக வழக்கில் தூக்குத் தண்டனை

## சிறப்பு நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு; அவர் துபாய் ஆஸ்பத்திரியில்

பொவர்,டிசெ.18

தேசத் துரோக வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப்புக்கு பொவர் சிறப்பு நீதிமன்றம் தூக்கு தண்டனை விதித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் (வயது 76). இவர் 2007 ஆம் ஆண்டு அதிபராக இருந்தபோது பாகிஸ்தானின் அரசியல் சட்டத்தை முடக்கி நெருக்கடி நிலையை அறிவித்தார். இது தொடர்பாக முஷாரப் மீது தேசத்துரோக வழக்கு, டிசம்பர் 2013 பொவர் சிறப்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. முஷாரப் மீது மார்ச் 31, 2014 அன்று குற்றம் சாட்டப்பட்டது, அதே ஆண்டு செப்டம்பர் மாதம் சிறப்பு நீதிமன்றத்தில் அரசு தரப்பு முழு ஆதாரங்களையும் தாக்கல் செய்தது.

இருப்பினும், மேல்முறையீட்டு மன்றங்களில் வழக்கு காரணமாக முன்னாள் இராணுவ சர்வாதிகாரி முஷாரப் வழக்கு நீடித்தது. அவர் மார்ச் 2016 இல் பாகிஸ்தானை விட்டு வெளியேறினார்.

முஷாரப் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெறுவதற்காக 2016 ஆம் ஆண்டு துபாய் சென்றார். இன்னும் நாடு திரும்பவில்லை. தற்போது துபாய் ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் பெஷாவர் உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி வக்கார் அஹ்மத் சேத் தலைமையிலான மூன்று பேர் கொண்ட சிறப்பு ஆயம் பர்வேஸ் முஷாரபுக்கு தேசத் துரோக வழக்கில் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பு அளித்து உள்ளது.



# அரசியலுக்கு வருவேன் ரஜினிகாந்த் மிக உறுதி



மும்பை,டிசெ.18

அரசியலில் நுழைய வேண்டாம் என்று அமிதாப்பச்சன் அறிவுரை கூறிய போதிலும், நான் அரசியலுக்கு வருவேன் என்று 'தர்பார்' படவிழாவில் நடிகர் ரஜினிகாந்த் கூறினார்.

நடிகர் ரஜினிகாந்த் நடித்த 'தர்பார்' படத்தின் முன்னோட்டம் (டிரெய்லர்) வெளியீட்டு நிகழ்ச்சி, மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்ச்சியில், நடிகர் ரஜினிகாந்த் கூறியவை வருமாறு: –

திரையிலும் சரி, திரைக்கு பின்னாலும் சரி, நடிகர் அமிதாப்பச்சன்தான் எனக்கு வழிகாட்டியாக இருக்கிறார்.

அவர் பின்பற்றி வருகிற 3 விஷயங்களை அவர் எனக்கு அறிவுரையாகக் கூறினார்.

முதல் விஷயம், அன்றாடம் உடற்பயிற்சி செய் என்று சொன்னார். இரண்டாவது விஷயம், எப்போதும் வேலை செய்து கொண்டிரு. நீ விரும்புவதை எல்லாம் செய், மற்றவர்கள் என்ன சொல்வார் களோ என்று கவலைப்படாதே என்று கூறினார்.

மூன்றாவது விஷயம், அரசியலில் நுழையாதே என்று கூறினார்.

அவர் கூறிய முதல் இரண்டு அறிவுரைகளை நான் பின்பற்றி வருகிறேன். ஆனால், மூன்றாவது அறிவுரையை சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாக என்னால் பின்பற்ற முடியவில்லை. – இவ்வாறு ரஜினிகாந்த் பேசினார்.

இந்த நிகழ்ச்சியின் போது, ரஜினிகாந்திடம் நிருபர்கள் பேட்டி கண்டனர். அப்போது ரஜினிகாந்த் கூறியவை வருமாறு: –

கடந்த 45 ஆண்டுகளில் 160 படங்கள் நடித்து விட்டேன். எல்லாவிதமான கதாபாத்திரங்களும் நடித்து விட்டேன். இருப்பினும், நடிக்க விரும்புகிற ஏதாவது ஒரு கதாபாத்திரம் உண்டென்றால், அது திருநங்கை கதாபாத்திரம்தான். ஆனால், இதுவரை அப்படி ஒரு வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

பொதுவாக, நான் மகிழ்ச்சியான கதாபாத்திரங்களிலேயே நடித்து வருகிறேன். பொலிஸ் அதிகாரி கதாபாத்திரம் என்பது சீரியசானது. குற்றவாளிகளைத் துரத்த வேண்டும். எனவே, நான் அதை தவிர்த்து விடுவேன்.

ஆனால், டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் அருமையான கதையுடன் வந்தார். இது, வழக்கமான பொலிஸ் கதாபாத்திரம் அல்ல. அவர் என்னிடம் வித்தியாசமான நடிப்பை கொண்டு வந்துள்ளார். – இவ்வாறு ரஜினிகாந்த் கூறினார்.

# பிரமோஸ் சூப்பர் சோனிக் ஏவுகணை சோதனை வெற்றி என்கிறது இந்தியா




புவனேஷ்வர்,டிசெ.18

இந்தியாவின் பிரமோஸ் ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் பாதுகாப்புக்காக பிரமோஸ் ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஒடிசா கடற்கரையில் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக செய்யப்பட்டதாக டி.ஆர்.டி.ஓ. தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை கப்பலை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. சோதனையில் கடலில் நிறுத்தப்பட்டிருந்த இலக்கை துல்லியமாக தாக்கி பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணை அழித்தது.

## அதிகரிக்கும் சிறுநீரகப் பாதிப்பு

# பில்டிங் ஸ்ராங்கு பேஸ்மெண்டு வீக்!

தமிழகத்தில் அண்மை காலமாக சிறுநீரகப் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் உடலில் 'சிக்ஸ் பாக்' வடிவமைப்பு வருவதற்காக ஊட்டசத்து பவுடரை தன்னிச்சையாக எடுத்துக் கொண்ட பலர் சிறுநீரகப் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியாவில் ஆண்டுக்கு ஒரு லட்சம் பேர் சிறுநீரகப் பாதிப்பால் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் மாதம் இருமுறை 'டயாலிசிஸ்' செய்து கொள்கின்றனர் எனப் புள்ளிவிவரம் ஒன்று தெரிவிக்கின்றது.

அதிகமாக சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானோர் பட்டியலில் தமிழகம் 2 ஆவது இடத்தில் உள்ளது. நாளுக்கு நாள் தமிழகத்தில் சிறுநீரக நோயாளிகள் பெருகிவருகின்றனர் என மருத்துவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். குறிப்பாக 90 சதவீதம், பெண்கள்தான் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெண்களுக்கு முடி உதிர்தல், தூக்கமின்மை, கண்ணுக்கு கீழ் சுருக்கம், கை கால் வீங்குதல், மூட்டு வலி, மாதவிடாய் காலங்களில் அதிக இரத்தப்போக்கு, தலைவலி, ஈரத்தச் சோகை போன்றவை சிறுநீரகப் பாதிப்புக்கான அறிகுறிகளாக மருத்துவர்கள் சுட்டிக்கட்டுகின்றனர்.

15 வயதில் இருந்து 45 வயதுள்ள பெரும்பாலான பெண்கள் அடிக்கடி தலைவலி வந்தால் தலைவலி கிரீம்களை பயன்படுத்துவதை வழக்கமாக வைத்திருக்கின்றனர் அவர்கள் அதனை விடுத்து வருடத்திற்கு இருமுறை முழு உடல் பரிசோதனை செய்து கொள்வது அவசியம் என்று அறிவுறுத்துகின்றனர் டாக்டர்கள்.

பெண்களுக்கு சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட முக்கிய காரணமாக உடல் பருமன், கட்டுப்பாடில்லா உணவு, அதிக உப்புசத்துள்ள நொறுக்குத்தீனி வகைகளை உண்பது ஆகியவை சுட்டிகாட்டப்படுகின்றன. டி.வி பார்த்துக் கொண்டே சாப்பிடுவது, ஹோட்டலில் வண்ணக்கலவை பயன்படுத்தப்பட்ட சிக்கன் வகைகளை சாப்பிடுவது போன்றவை தொடர்ந்தால் சிறுநீரகம் எளிதாகப் பாதிப்படையும் என்கின்றனர் மருத்துவர்கள்.

அதேநேரத்தில் ஆண்களில் தொடர்ந்து மது அருந்தும் நபர்கள், உணவு கட்டுப்பாடில்லா நபர்கள் மற்றும் உடலை வலுவாக்க உடற்பயிற்சி செய்வதாகக் கூறி 'சிக்ஸ் பாக்' முயற்சிக்காக கிரியாட்டின் என்ற ஊட்டச்சத்துப் பொடியை அதிகமாக உட்கொள்ளும் நபர்களின் சிறுநீரகங்களும் பாதிப்புக்குள்ளாவது அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

தகுதியான உடற்பயிற்சியாளரின் அறிவுரைப்படி குறிப்பிட்ட அளவு எடுத்துக் கொண்டால் பாதிப்பு வராது. உடற்பயிற்சி மையத்துக்குச் சென்ற இரண்டு நாள்களில் உடல் பழனி படிக்கட்டு போல அமையவேண்டும் என்று நினைத்து அதிக கிரியாட்டின் உட்கொண்டால் அது சிறுநீரகத்தைச் செயல் இழக்க செய்யும் என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆண்களுக்கு அடிக்கடி சிறுநீர் வந்தாலும், சிறுநீர் குறைவாக வந்தாலும் சிக்கல்தான். உடலில் சர்க்கரையின் அளவும், உப்புச்சத்தும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சர்க்கரை நோயுள்ளவர்கள் அதனைக் கட்டுக்குள்



வைத்திருக்க வேண்டும். முறையான கால நேரம் இன்றி கட்டுப்பாடற்ற உணவுப் பழக்கவழக்கம், உடல் பருமன், சோடா மற்றும் குளிர்பானங்கள் அருந்துவது ஆகியவை மெல்ல மெல்ல சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்துவிடும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

நாள் ஒன்றுக்கு 5 மில்லி கிராமுக்கு அதிகமாக உப்பு எடுத்துக்கொள்ளக்கூடாது. உடலுக்கு வலு ஏற்றுவதாக நினைத்து நிறமேற்றப்பட்ட கிரில் சிக்கன், தந்தூரி சிக்கன் போன்றவற்றைக் கடைகளில் தொடர்ந்து வாங்கிச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். எந்த ஒரு உணவையும் வீட்டில் தயாரித்து சாப்பிடுவதே நலம் பயக்கும் என்கின்றனர் மருத்துவர்கள்.

சீரான உணவு பழக்கவழக்கம், முறையான உடற்பயிற்சி, தினமும் நடைபயிற்சி, உயரத்திற்கேற்ற எடை என்று உணவு கட்டுப்பாட்டுடன் இருந்தால் சிறுநீரகத்தைக் காத்துக்கொள்வதோடு நாமும் நீண்ட ஆயுளுடன் வாழலாம் என்பதே மருத்துவர்களின் அறிவுரையாக உள்ளது.

# பிலிப்பீன்ஸ் நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 7 ஆனது

மணிலா, டிசெ.18

பிலிப்பீன்ஸில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக, சூப்பர் மார்க்கெட் ஒன்று இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந்தனர். இதனால் நிலநடுக்கத்துக்கு பலியானோரின் எண்ணிக்கை 7 ஆனது.

பிலிப்பீன்ஸின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள அந்த நாட்டின் 2 ஆவது பெரிய தீவான மின்டனாவ் தீவை ஞாயிறன்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.9 புள்ளிகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கடைகள் மற்றும் அரசு அலுவலகங்கள் உள்பட ஏராளமான கட்டடங்கள் இடிந்து விழுந்தன. தவோ நகரில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் 6 வயது சிறுமி பலியானாள். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தில் அந்த நாட்டின் அதிபர் ரோட்ரிகோ டியூடர்டே தனது குடும்பத்துடன் உயிர் தப்பினார்.

இந்த நிலையில் நிலநடுக்கத்தின் போது மின்டனாவ் தீவின் படாடா நகரில் உள்ள ஒரு சூப்பர் மார்க்கெட் இடிந்து தரைமட்டமானதும், கட்டட இடிபாடுகளில் சிக்கி 6 பேர் உயிரிழந்தமையும் தற்போது தெரியவந்துள்ளது. அவர்களது உடல்கள் நேற்று மீட்கப்பட்டன.

இன்னும் சில இடங்களில் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் இடிந்து கிடக்கின்றன எனவும், அவற்றின் இடிபாடுகளுக்குள் ஆள்கள் சிக்கியிருக்கக்கூடும் என நம்பப்படுவதாகவும் மீட்பு குழுவினர் கூறுகின்றனர். எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.



# தொழிற்சாலைத் தீ விபத்தில் சிக்கி 10 தொழிலாளர் உடல் கருகிப் பலி

## வங்காளதேசத்தில் மீண்டும் கோரம்



டாக்கா,டிசெ.18

வங்காளதேசத்தில் மின் விசிறித் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 10 பேர் உடல் கருகி பலியாகினர்.

வங்காளதேச தலைநகர் டாக்காவின் புறநகர் பகுதியான காசிப்பூரில் உள்ள மின்விசிறிகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர்.

ஞாயிறன்றுமாலை இந்தத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு திடீரென தீப் பிடித்தது. இதனால் பதறிப் போன தொழிலாளர்கள் அலறியடித்துக் கொண்டு தொழிற்சாலையை விட்டு வெளியே ஓடினர்.

ஆனால் மளமளவென கொழுந்து விட்டு எரிந்த தீ, சற்று நேரத்தில் தொழிற்சாலை முழுவதும் பரவி நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது. இதனால் தொழிலாளர்கள் வெளியே வரமுடியாமல் உள்ளே சிக்கிக்கொண்டனர்.

தீவிபத்து குறித்து தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் தீயின் கோரப்பிடியில் சிக்கி 10 பேர் உடல் கருகி பலியாகினர். மேலும் பலர் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

இது வங்காளதேசத்தில் ஒரு வாரத்துக்குள் நடந்த 2 ஆவது மோசமான தீவிபத்து சம்பவமாகும். கடந்த புதன்கிழமை டாக்கா அருகே கெரானிகஞ்ச் என்ற இடத்தில் உள்ள பிளாஸ்டிக் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் 15 பேர் உடல் கருகி பலியானமை குறிப்பிடத்தக்கது.

# கொங்கோவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 30பேர் மரணம்

கின்ஷாசா,டிசெ.18

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான கொங்கோவில் தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்த விபத்தில் சிக்கி 30 பேர் பலியாயினர்.

கொங்கோவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹவுத் ஊலே மாகாணத்தின் தலைநகர் இசிரோவில் தங்க சுரங்கம் உள்ளது. இங்கு ஏராளமான தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

இசிரோவில் கடந்த சில நாள்களாக இடைவிடாது கனமழை கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக தங்க சுரங்கம் அமைந்துள்ள பகுதியில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் தங்க சுரங்கம் இடிந்து விழுந்தது.

அப்போது சுரங்கத்தில் வேலை பார்த்து கொண்டிருந்த தொழிலாளர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர். இதையடுத்து உடனடியாக மீட்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டன. எனினும் 30 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது.

மேலும் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்



# சீனாவுக்கு ஆதரவாக மக்கள் திரண்டனர் ஹொங்கொங்கில் பெரும் ஆர்ப்பாட்டம்!

ஹொங்கொங்கில் சீனாவுக்கு ஆதரவாகவும், அண்மைகால வன்முறைகளை கண்டித்தும், பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஹொங்கொங்கில் கிரிமினல் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தி விசாரிக்க வகை செய்யும் சட்டத் திருத்தப் பிரேரணை எதிர்த்தும், கூடுதலான ஜனநாயக உரிமைகளை கோரியும் பலமாதங்களாக நடைபெறும் போராட்டம், பெரும்பாலான நேரங்களில், வன்முறைகளில் முடிந்த வண்ணம் இருக்கிறது.

இந்நிலையில், இந்த வன்முறை போராட்டங்களைக்கண்டித்து ஹொங்கொங்கில் ஒரு லட்சம் பேர் பங்கேற்ற பிரம்மாண்ட பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

ஹொங்கொங்கில் தாமார் பூங்காவில் ஒன்றுகூடியவர்கள், ஹொங்கொங் காவல்துறைக்கு ஆதரவாக முழக்கமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில், பங்கேற்றவர்கள், சீனாவுக்கு தங்கள் ஆதரவை தெரிவிக்கும் வகையில், அதன் தேசிய கொடியை அசைத்து, உற்சாக முழக்கமிட்டனர்.



**ஆஸ்திரேலியாவில் பரபரப்பு:**

# நடுவானில் விமானத்தில் திடீர் புகை அதனால் அவசரமாகத் தரையிறக்கம்

சிட்னி,டிசெ.18

ஆஸ்திரேலியாவில் நடுவானில் பறந்த விமானத்தில் திடீர் புகை உருவானது. அவசரமாக அந்த விமானம் தரையிறக்கப்பட்டதால் பயணிகள் உயிர்தப்பினர்.



ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இருந்து பேர்த் நகருக்கு குவாண்டாஸ் விமான நிறுவனத்தின் 'ஏர்பஸ் ஏ330' ரக விமானம் புறப்பட்டுச் சென்றது. விமானத்தில் 271 பயணிகள் இருந்தனர்.

புறப்பட்டு 20 நிமிடத்துக்கு பிறகு விமானத்தில் விமானிகளின் அறைக்குள் திடீரென புகை உருவானது. என்ன நடக்கிறது என சுதாகரிப்பதற்குள் அந்த அறை முழுவதும் புகை சூழ்ந்தது. இதுபற்றி தெரியவந்ததும் பயணிகள் மத்தியில் பெரும், பதற்றமும் பீதியும் உருவானது.

இதையடுத்து, விமானி உடனடியாக விமானத்தை சிட்னி விமான நிலையத்துக்குத் திருப்பினார். அங்கு விமானம் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. அதனை தொடர்ந்து விமானத்தின் 2 புறமும் அவசரகாலக் கதவுகள் திறக்கப்பட்டு அவற்றின் வழியாகப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர்.

பீதியில் இருந்த பயணிகள் ஒருவரையொருவர் முண்டியடித்துக் கொண்டு வெளியேற முயன்றதில் சிலருக்கு கை, கால்களில் லேசான சிராய்ப்புகள் ஏற்பட்டன.

விமானி சாதுரியமாக செயல்பட்டு, சரியான நேரத்தில் விமானத்தைத் தரையிறக்கியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கதைகளை சொல்லும் ஆரம்பகால சித்திரமாக சுலவேசி குகை ஓவியம்



இந்தோனேசியாவில் கண்டெடுக்கப்பட்ட குகை ஓவியத்தை, கதைகளை சொல்லும் ஆரம்பகால சித்திர பதிவுகள் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2017 ஆம் ஆண்டு சுலவேசி தீவில் உள்ள ஒரு குகையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஓவியமானது, 44 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது என்பது ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

இந்த ஓவியம் விலங்குக் குணாதசியங்களைக் கொண்ட எட்டு பேர் வனப் பகுதியில் உள்ள 6 பன்றிகளை, ஈட்டி மற்றும் கயிறுகளைக் கொண்டு துரத்திச் சென்று வேட்டையாடும் விதமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# கொழும்புக் கம்பன் கழகம் நடத்தும் நிருத்தோற்சவம் – ஆடல்வேள்வி

கொழும்புக் கம்பன் கழகத்தின் நிருத்தோற்சவம்–ஆடல்வேள்வி இம்முறையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் முத்தமிழுக்கும் விழா எடுத்து வருவது தெரிந்ததே. அந்த வகையில் இந்த ஆண்டுக்குரிய நாட்டிய விழாவான நிருத்தோற்சவம் – 2019 எனும் பெயரிலான ஆடல்வேள்வி எதிர்வரும் டிசம்பர் மாதம் 27,28,29 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமின் மண்டபத்தில் தினமும் மாலை 6.00 மணி தொடக்கம் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஈழத்தின் பிரபலமான நடன நிறுவனங்களான சைவமங்கையர் கழகம், தியாகராஜ கலைக்கோயில் நடனப்பள்ளி, நர்த்தன நிர்ணயா நாட்டியப் பள்ளி, அபிநய தேத்ரா நடனப்பள்ளி, பொன்னாலை சந்திர பரத கலாலயம், நாட்டிய கலாகேந்திரா ஆகியவை இவ்வாண்டு நாட்டிய விழாவில் கலந்து கொள்கின்றன. இந்நிறுவனங்களை இயக்கும் தலைசிறந்த நாட்டிய வல்லுனர்களான திருமதி பவானி குகப்பிரியா, திருமதி தயானந்தி விமலச் சந்திரன், திருமதி திவ்யா சுஜேன், திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன், திருமதி துஸ்யந்தி சுகுணன், ஸ்ரீமதி ஷாலினி வாகீசன் ஆகியோரின் மாணவர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கொழும்பு சைவ மங்கையர் கழக மாணவியர் வழங்கும் சீதாபகரணம் நிகழ்ச்சியும் அபிநயதேத்ரா நடனப்பள்ளி வழங்கும் வில்லிதன் தூது எனும் நிகழ்வும் 27ஆம் திகதி மாலை ஆடல் வேள்வியில் நடைபெறவுள்ளன. பொன்னாலை சந்திரபரத கலாலயம் நாட்டியப் பள்ளி வழங்கும் தமிழமுதம் நிகழ்ச்சியும் நாட்டிய கலாகேந்திரா நாட்டியப் பள்ளி வழங்கும் அறுசமய ஆராதனை எனும் நிகழ்வுகளும் 28 ஆம் திகதி ஆடல் வேள்வியில் நடைபெறவுள்ளன. தொடர்ந்து 29ஆம் திகதி ஆடல் வேள்வியில் தியாகராஜ கலைக்கோயில் மாணவியர் வழங்கும் திருகோணமலை வில்லூன்றிக் குறவஞ்சி எனும் நிகழ்வும் நர்த்தன நிர்ணயா நாட்டியப் பள்ளியின் நர்த்தன சங்கமம் நிகழ்வும் நடைபெறவுள்ளன.

விழா நாட்களில் வெள்ளவத்தை ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி திருக்கோயிலின் தலைவி செல்வி மாலா சபாரட்ணம், நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் பொ. ஜெயராமன் தம்பதியர், ரஞ்சனாஸ் நிறுவன தலைவர் தேசமான்ய கே.துரைசாமிச் செட்டியார் தம்பதியர் ஆகியோர் விழா நிகழ்வுகளை தினந்தோறும் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

இவ்விழாக்களில் ஓய்வுபெற்ற முன்னாள் நீதியரசரும், கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவருமான ஜெ.விஸ்வநாதன், இலங்கைத் தமிழ் மாதர் சங்க முன்னாள் தலைவி திருமதி நீலா தயாபரன், உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.துரைராஜா ஆகியோர் தலைமையுரையாற்றி விழாவைச் சிறப்பிக்கவுள்ளனர்.

ஈஸ்வரன் பிரதர்ஸ் நிறுவன தலைவர் ஈஸ்வரன் கணேஷ், சட்டத்தரணி திருமதி சசிதேவி நீலகண்டன், இந்திய தூதரகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் டி.சி.மஞ்சுநாத் ஆகியோர் தொடக்கவுரையாற்றி விழாவைச் சிறப்பிக்கவுள்ளனர்.

விழா நிகழ்ச்சிகள் சரியாக மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 8.30 மணிவரை நடைபெறவுள்ளன.

நம்தமிழ்மொழியின் ஆழம் மிகுந்த கலை வடிவங்களில் விருப்பும், பரிச்சயமும் இல்லாது இன்றைய இளைஞர்கள் மலினமான கலைவடிவங்களில் பெரும்பாலும் மனஞ்செலுத்தி வருகின்றனர். அத்தகு புதிய தலைமுறையினரை நம் மரபுக் கலைகள்பால் ஈர்த்து நம் தமிழ்க்கலைகளின் ஆழம் உணர்த்துவது இன்றைய காலத்தின் தேவையாய் இருக்கிறது. பாரம்பரியமான கலை இலக்கிய வடிவங்களை இன்றைய இளைய தலைமுறையினரிடம் கொண்டு செல்வதற்கென கொழும்புக் கம்பன்கழகம் இந்த நாட்டிய வேள்வியை ஒழுங்கு செய்துள்ளது.

இவ்விழாவில் நடைபெறும் நடன நிகழ்ச்சிகள் சம்பிரதாய பூர்வமான அரங்கேற்றங்களன்றி நடனக்கலைகளின் அதியுயர் வெளிப்பாடாக அமைவது மகிழ்ச்சிக்குரியதொன்று. ஒருமித்து இவ்விழாவில் பல நடன அமைப்புகளும் கலந்துகொள்வதால் ஒப்பீட்டு அடிப்படையில் தம் நடனம் அவதானிக்கப்படும் என அறிந்து, தனி நடனங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் எனப் பற்பல நிகழ்வுகளை உருவாக்கி வழங்குவதால், அந்நடன நிகழ்வுகள் காண்போரின் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தாகவே அமையும் என எதிர்பார்க்கலாம்.

இதனால் நாட்டிய இரசிகர்கள் தரம் மிக்க கலைவடிவங்களை இரசிக்கும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அனுமதி இலவசமாக நடைபெறும் இவ்விழாவுக்கு, குறித்த நேரத்துக்கு வருமை தந்து சிறப்பிக்குமாறு கொழும்புக்கம்பன் கழகத்தினர் இரசிகர்களை வேண்டுகின்றனர்.













# மாற்று அணியை துருப்புச்சீட்டாக பயன்படுத்தும் ரெலோ, புளொட்!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றச்சாட்டு

**(எஸ்.நிதர்ன்)**
**யாழ்ப்பாணம், டிசெ. 18**
**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிகளான ரெலோ, புளொட் அமைப்பினர் மாற்று அணியில் இணைந்து கொள்வதற்குத் தயாரில்லை. அத்தகைய சிந்தனையும் இப்போதைக்கு அவர்களிடம் இல்லை. ஆனால் மாற்று அணியைத் தங்களுக்கு ஒரு துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி தமிழரசுக் கட்சியிடம் தங்களுக்கான ஓரிரு ஆசனங்களை அதிகமாகப் பெற்றுக்கொள்வது தான் அவர்களது இன்றைய நோக்கம்.**



–இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உண்மையாகவே இப்போது கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கின்றதாகக் கூறப்படும் குழப்பங்கள் என்பது ஒரு புதிய குழப்பங்கள் அல்ல. இதற்கு முன்னரும் இவ்வாறான குழப்பங்கள் வந்திருக்கின்றன. முக்கியமாக செல்வம் அடைக்கலநாதன் கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டு தாங்கள் இன்னுமொரு கூட்டுக்குள் சேரப் போகிறோம் என்று சொல்லி எங்களுடனும் சில பேச்சுகளை நடத்தியிருந்தார்.

தமிழரசுக் கட்சியுடன் இணைந்து போக முடியாது எனப் பல வீரதீர கதைகளைக் கூறி – அதாவது காலையில் அப்படி கூறி மாலையில் மீண்டும் போய் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து கொண்டார்கள் என்பது தான் வரலாறு.

அவர்களைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஒன்று இரண்டு ஆசனங்களைக் கூட தலாகப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தால் அது தான் அவர்களுடைய தேவை. அந்தத் தேவை நிறைவேற்றப்படுமாக இருந்தால் அவர்களுக்கு அது போதுமானதாக இருக்குமென்றே நான் நினைக்கிறேன்.

மாற்று அணி குறித்தோ அல்லது மாற்றணியில் இணைவது குறித்தோ இதுவரை பேச்சு முயற்சியை அவர்கள் எடுக்கவும் இல்லை. அவர்கள் வரவும் இல்லை. எதிர்காலத்தில் அவர்கள் வருவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. சில சமயங்களில் எங்களை ஒரு துருப்புச் சீட்டாக பாவிக்க எண்ணுகிறார்கள் போல் தோன்றுகிறது – என்றார். (ஐ – 07)

# பம்பலப்பிட்டி கடற்கரையில் தஞ்சமடைந்த கடல் சிங்கம்!

கொழும்பு, டிசெ. 18

கொழும்பு - பம்பலப்பிட்டிக் கடற்கரையில் கடல் சிங்கம் ஒன்று தஞ்சமடைந்துள்ளது.

கடந்த சில வாரங்களாகக் கொழும்பு மற்றும் காலி கடல் பகுதிகளில் கடல் சிங்கங்கள் கரையொதுங்கிய வண்ணம் உள்ளன. இவை சீரற்ற வானிலை காரணமாகத் தென்துருவத்தில் இருந்து திசைமாறி வந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு தினங்களுக்கு முன்னர் கரையொதுங்கிய இந்த கடல் சிங்கம் நேற்று முன் தினமும் அங்கேயே இருந்தது. கரையொதுங்கிய இந்த கடல் சிங்கத்தை மக்கள் ஆர்வத்துடன் வந்து கண்டு களிக்கின்றார்கள்.





# பொதுத் தேர்தலுக்கான செலவு 200 கோடி ரூபாவைத் தாண்டும்

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான செலவு சுமார் 200 கோடி ரூபாவை தாண்டக்கூடும் எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தத் தேர்தலில் 6 ஆயிரம் வேட்பாளர்கள் என்றும் தேர்தல்கள் செலவீனங்களைக் குறைக்க புதிய சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்றும் அந்த நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தேர்தல் தொடர்பான செலவுகளைக் குறைக்க பல புதிய சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை தமது அமைப்பு நடத்திய ஆய்வின் அடிப்படையில், நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மூன்று முக்கிய வேட்பாளர்கள் மட்டும் 40 கோடி ரூபாவைப் பிரசார நடவடிக்கைகளுக்காக செலவிட்டனர் என அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# நல்லூர்ப் பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 18

நல்லூர் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்துக்கு ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன எதிர்ப்புத் தெரிவித்தபோதும் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கான விசேட அமர்வு தவிசாளர் த. தியாகமூர்த்தி தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த அமர்வில் சபையின் அடுத்தாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுச் சபையின் அங்கீகாரத்துக்கு விடப்பட்டது. அப்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பெண் உறுப்பினரான திருமதி வாசுகி குறுகிய நேரத்தில் திருத்தியமைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் தரப்பட்டுள்ளதாகவும், அது பற்றி ஆலோசிக்கக் கால அவகாசம் தேவையெனவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் வரவு – செலவுத்திட்டத்தில் பல குறைகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டினர்.

பின்னர் தவிசாளரினால் அது வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதன்போது வரவு – செலவுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சுயேச்சைக் குழு ஆகியன ஆதரித்து வாக்களித்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி. எதிர்த்து வாக்களித்தன.

இதேவேளை, நல்லூர்ப்பிரதேசசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றபோது சபை உறுப்பினர்களில் இரு வாக்குகளினால் தோற்கடிக்கப்பட்டது. இந்நிலையில் மீண்டும் திருத்தங்களுடன் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ – 07)

# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக தேவிகா அபேரத்ன பதவிப் பிரமாணம்

கொழும்பு, டிசெ. 18

மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி தேவிகா அபேரத்ன மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக திருமதி தேவிகா அபேரத்ன பதவிப் பிரமாணம் செய்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி தேவிகா அபேரத்னவை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கும் ஜனாதிபதியின் பரிந்துரைக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான அரசமைப்புச் சபை கடந்த வாரம் ஏகமனதாக அனுமதி வழங்கியிருந்தது.

இதேவேளை, ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் வழங்கும் முதலாவது நீதித்துறை நியமனம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





# தமிழர் தேச உரிமை மீட்புக்கு வரலாற்றுப் பிறப்பெடுத்ததே இலங்கைத் தமிழரசுக் கட்சி




இலங்கைத் தமிழரசுக் கட்சியானது, அதன் பிதாமகரான, தேசத் தந்தை சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களால் தமிழர்களுக்கென இந்தத் தீவில் ஒரு சுயாட்சி அரசை நிறுவவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கட்சி; தனது கொள்கையையே தனது பெயராகவும், அந்தக் கொள்கையையே தனது இயங்குவிதியாகவும் கொண்டிருக்கின்ற கட்சி. இருந்தாலும்,

எமது கட்சியின் பெயர், எமது கட்சியின் கொள்கையை மட்டும் எடுத்தியம்பி நிற்கவில்லை ; அது – எமது இனத்தின் வரலாற்றையுமே குறித்து நிற்கின்றது. இந்தத் தீவில், தமிழர்கள், உன்னதமான சமூக – பண்பாட்டு வாழ்வை மட்டுமல்லாது, தன்னிறை வான ஒரு பொருளாதாரப் பொறி முறையையும் முன்பொரு காலத்தில் கொண்டிருந் தனர்; தமக் கெனத் தனித்த அரசுகளை நிறுவி, சீரிய முறை யில், ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு வரை, அவர்கள் தம்மைத் தாமே ஆண்டனர்.

பின்னர், இந்தத் தீவை வன்கவர்வு செய்த வெளிநாட்டுப் படையெடுப்பாளர்கள், தமது இலகுவான ஆளுதலுக்காக, முழுத் தீவையும் ஒரே நாடு என்று ஆக்குகின்ற வரையில் – இந்தத் தீவில் இறைமையுடைய தமிழரசுகளை எமது இனம் கொண்டிருந்தது என்ற வரலாற்றின் குறியீடாகவும் எமது கட்சி திகழ்கின்றது.



எமது கட்சியின் சின்னமாக, எமது தேசபிதா அவர்கள் தேர்ந்தெடுத்த ’வீடு’ என்பதும் அதையே குறிக்கின்றது. இந்த ’வீடு’ என்பது எமது இனத்தின் இல்லம்; எமது இனத்தின் தாயகம்; எமது இனத்தின் இறையாண்மை. எமது இனத்தின் இல் லத்தை, எமது இனத்தின் தாயகத்தை, எமது இனத் தின் இறையாண்மையை, மீளவும் மீட்டெடுத்து, எமது இனத்திற்கே அதிகாரபூர்வமாக உரித்து டையதாக்கி விடுவதுதான் எமது கட்சியின் அடிப்ப டைக் கொள்கை. எமது கட்சியின் அந்த அசையாத கொள்கையைத் தான் எமது கட்சியின் சின்னமான ’வீடு’ பிரதிபலித்து நிற்கின்றது.

எவ்விதமாக ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எமது கட்சிக்கு வரலாறு ஓர் அரசியல் பிறப்பைத் தந்ததோ, அதே விதமாகவே, பத்தாண்டுகளுக்கு முன்னர், எமது இனத்தின் விடுதலைப் போராட்டம் இருந்த அன்றைய காலச் சூழலுக்கு இசைவாக, வரலாறு எமது கட்சிக்கு ஒரு புதிய அரசியற் பாத்திரத்தையும் தந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற குடையின் கீழ் கொள்கை ரீதியாக ஒன்றிணைந்த தமிழ் அரசியல் கட்சிகளைத் தலைமையேற்று வழி நடத்தும் பாத்திரமே அது. அந்தத் தலைமைப் பாத்திரம் என்பது கூட, எமது கட்சியின் வரலாறு, பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றின் அடிப்படையிலிருந்துதான் வந்தது. அந்தப் புதிய கூட்டமைப்பின் தலைமைக் கட்சியாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே இன்றுவரை விளங்கி வருகின்றது; அவ்வாறே அது என்றும் விளங்கி வரும்.

ஆயுதப் போராட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின்னரான தற்போதைய சூழலில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையிலான, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆகிய நாம்தான் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள். முற்றுமுழுதான சிறீலங்காப் படை மயமாக்கத்தின் கீழ், சிறீலங்கா அரசாங்கத்தின் முழுமையான ஆளுகையின் கீழ், பலவிதமான அழுத்தங்களுக்கு மத்தியிலும் – துணிவுடனும், உறுதியுடனும், தெளிவுடனும் – வாக்களித்த தமிழ் மக்களால் சுதந்திரமாகத் தேந்தெடுக்கப்பட்ட தனிப் பெரும் கட்சி எமது கட்சி. அந்த வகையில், இப்போது – நாம்தான் தமிழர்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள். எவ்விதமான ஆயுதப் பின்னணிகளும் அற்ற – வன்முறைப் போராட்ட வடிவங்களை என்றைக்கும் நிராகரித்த – நீண்ட ஜனநாயகப் பண்புகளைத் தன்னகத்தே கொண்ட – நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டங்களையே எப்போதும் முன்வைத்த – இலங்கைத் தமிழரசுக் கட்சியான எமக்குத்தான் – அதிகூடிய இராஜீய அங்கீகாரமும் அனைத்துலக சமூகத்தால் வழங்கப்படுகின்றது. இந்த இராஜீய அங்கீகாரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஏற்புடையதாகவும் உரித்துடையதாகவும் கூட பரிணமித்துள்ளது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம், இப்போது முற்றிலும் வேறுபட்ட புதியதோர் அத்தியாயத்திற்குள் நுழைந்திருக்கின்றது. இந்தப் புதிய வரலாற்றுப் பரிமாணத்தில், இந்தப் போராட்டத்தைத் தலைமையேற்று வழி நடத்திச் செல்லும் எமது கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களாகிய நாம், எமது கட்சியின் பேராளர்களாகிய உங்களுக்கும், எமக்கு வாக்களித் துத் தம்மைப் பிரதிநிதித்துவம் செய்யும் தகுதியை தந்த எமது மக்களுக்கும், எமது கட்சியின் கொள்கை நிலைப்பாடு சார்ந்த ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக இருக் கின்றோம்.

1948இல் சிறீலங்கா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னான, முதல் 30 ஆண்டு கால வரலாறு என்பது, தமிழர்களைப் பொறுத்தவரையில், ஏமாற்றுதல்களாலும் அவமதிப்புக்களாலுமே நிரப்பப்பட்டிருந்தது. தமிழர்களோடு எழுதப்பட்ட உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் தூக்கியெறியப்பட்டன. சக மனிதர்களாக வாழ்வதற்குத் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளை நிராகரிக்கும் அரசமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இவற்றுக்கெல்லாம் நீதி கேட்டுத் தமிழினம் அமைதியாக முன்னெடுத்த மென்முறைப் போராட்டங்கள் அனைத்துமே, ஆயுத வன்முறைகள் மூலம் ஒடுக்கப்பட்டன.

இந்த அவமதிப்புகள் எல்லாவற்றினதும் அடிப்படை உண்மையாக இருந்தது, எங்களுக்குள் ஓர் அகப்பலமோ, அல்லது எங்களுக்கு, வெளியே ஒரு புறப் பலமோ இல்லாமல் எமது இனம் இருந்ததுதான். ஏமாற்றுதல்களாலும் அவமதிப்புக்களாலும் நிரப்பப்பட்ட இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் – தமிழினத்திற்கென ஒரு தனியான தனித்த அரசை உருவாக்குவதைத் தவிர வேறு வழிகள் இல்லை என்ற நிலைப்பாடு தோற்றம் கொண்டது. அந்த நிலைப்பாட்டின் அடிப் படையிலேயே – எமது கட்சியையும் ஓர் அங்கமாகக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ’தமிழீழம்’ என்ற தனியரசை உருவாக்க வேண்டும் என்ற வரலாற்றுத் தீர்மானத்தை, 1976 ஆம் ஆண்டு எடுத்தது. எமது கட்சியின் அந்தத் தீர்மானத்தின் அடிப்டையிலும், எமக்கென ஓர் அகப்பலம் இருக்கவேண்டும் என்ற அரசியற் தேவையின் அடிப்படையிலும் – வன்முறையை வன்முறை மூலமே எதிர் கொள்ளத் துணிந்த தமிழ் இளைஞர்கள், ஆயுத எதிர்ப்பு இயக்கங்களாக எழுச்சி கொண்டெழுந்தனர்.



தனக்கு எதிரான வன்முறைதான் தமிழினத்தை வன்முறைப் பாதைக்கு இட்டுச்சென்றது என்பதே வரலாறு. அமைதியான போராட்டங்கள் எல்லாம் ஆயுத பலம் கொண்டு கொடூரமாக நசுக்கப்பட்ட போது, தாமும் பதிலுக்கு ஆயுத பலத்தையே நாட வேண்டும் என்ற சூழலுக்குள் தமிழ் இளைஞர்கள் தள்ளப்பட்டனர். வேறு வழிகள் எதுவும் இல்லை என்ற விரக்தி நிலைக்கு வந்த பின்னர், ஆயுத பலத்தை மட்டுமே தாமும் நம்பவும் வன்முறைப் போராட்ட வடிவத்தையே தாமும் கைக் கொள்ளவும் தமிழ் இளைஞர்கள் நிர்ப் பந்திக்கப்பட்டனர்.



வன்முறை வடிவ அரசியல் போராட்டத்தின் வரலாறு ஆரம்பித்த 1980களுக்குப் பின்னான 30 ஆண்டுகள், எமது இனத்தினது சரித்திர ஏட்டில் இன்னொரு ஆழப் பதிந்த அத்தியாயம். இரத்தமும், கண்ணீரும், வீரமும், பெருமிதங்களும், துன்பங்களும் அழிவுகளும் என நீண்டு சென்ற அந்த ஆயுதப் போர் அத்தியாயம் – உண்மையில் இரண்டு விடயங்களைச் சாதித்திருந்தது:

ஒன்று, அகப் பலமாக எமது இனத்திற்கு உள்ளேயே உருவெடுத்த தமிழீழ விடுதலைப் புலிக ளின் பிரமாண்டமான வளர்ச்சி. அடுத்தது, எமது இனத்திற்குப் புறப் பலமாக இருக்கக் கூடிய ஏது நிலைகளோடு பரிணமித்த இந்தியத் தலையீடு.

இந்தியாவின் தலையீடு என்பது ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாக எமது போராட்டத்தில் இடம்பெற்றது. எமது விருப்புக்கள் என்னவாக இருந்தாலும், இந்தியாவின் தேசிய நலன்களுக்கு ஒத்திசைவாக அமையாத எந்த ஓர் அரசியல் தீர்வையும் இலங்கைத் தீவில் நாம் பெற்றுவிடுவதை இந்தியா வரவேற்காது என்பதுவே, இந்தியத் தலையீடு எமக்கு உணர்த்திய கட்டாயப் பாடமாக அமைந்தது. எனினும், இந்தியத் தலையீடு என்ற அம்சத்தையே சாதகமாகப் பயன்படுத்தி, இந்தியாவின் துணையுடனும் ஆசீர்வாதத்துடனும், எமது இனம் மதிப்புடன் வாழக்கூடிய ஒரு தீர்வினை ஒன்றுபட்ட இலங்கைக்குள் பெறக் கூடிய ஒரு வாய்ப்பினை நாம் பற்றி நின்றோம்.

எமது விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், காலம் இட்ட ஒரு கட்டாயக் கோலமாக இந்தியத் தலையீடு அமைந்தது. நுட்பமான இராஜதந்திர வளைவுகளை வரைந்து, சூட்சுமமான அரசியல் வர்ணங்களைக் கலந்து, அதனை ஓர் அழகான கோலமாக ஆக்குவதும், அல்லது, அதனைக் கலைத்துச் சிதைத்து அலங்கோலமாக ஆக்கி விடுவதும் எமது கைகளிலேயே இருந்தது. அந்த வகையிலேயே – பெரும் அகப்பலத்தை வைத்திருந்தும் கூட அடையக் கடினமான தழிழீழத் தனியரசு என்ற அசாத்தியமான ஒரு கொள்கைக்காகத் தொடர்ந்தும் உயிர்களைப் பலியிடுவதைத் தவிர்த்து விட்டு, ஒரு புறப்பலமாக உருவெடுத்திருந்த இந்தியாவின் அநுசரணையுடன், அந்த வாய்ப்பினைக் கச்சிதமாகப் பயன்படுத்தி, ஒன்றுபட்ட இலங்கைக்குள், எமது அடிப்படை உரிமைகளை விட்டுக்கொடுக்காத ஒரு தீர்வினைக் கண்டறியும் முயற்சிகளை எமது கட்சி ஆதரித்தது.

மென்முறை வழிகளிலும் வன்முறை வழிகளிலும் கடந்த 60 ஆண்டுகளாக எமது இனம் நிகழ்த்திய நீண்ட விடுதலைப் போராட்டம் எமக்குப் பல பட்டறிவுகளைத் தந்திருக்கின்றது. ஓர் இனமாக எங்களைப் புடம்போட்டு எடுத்திருக்கின்றது. கற்றறிந்த பாடங்களுக்காக நாங்கள் காவு கொடுத்த விலை மிகப் பெரியதாக இருக்கலாம்; இருந்தாலும், ஒரு சுபீட்சமான அரசியல் எதிர்காலத்தை வேண்டி நிற்கும் இனமான நாங்கள், அந்த இலட்சியம் நோக்கி எடுத்து வைக்க வேண்டிய அடுத்த அடிகளுக்கு, நாங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் அத்திபாரக் கற்கள் போன்றவை. தத்தமது தேச நலன்களை மட்டுமே மையப்படுத்தி உலக ஒழுங்கை வகுத்துச் செல்லும் உலகப் பெரும் சக்திகளின் சூட்சுமங் களைப் புரிந்து, அதற்கேற்ப மட்டுமே நாங்கள் இனிக் காய்களை நகர்த்திச் செல்ல வேண்டும் என்பதுதான் – கடந்த 60 ஆண்டு காலப் போராட்டம், குறிப்பாக, கடந்த 30 ஆண்டு கால வன்முறை வடிவிலான ஆயுதப் போராட்டம் எமக்குக் கற்பித்துச் சென்றிருக்கும் வரலாற்றுப் பாடம்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் திடீரென தீ பற்றி நாசமானது வீடு



வவுனியா, டிசெ. 18

வவுனியா, பண்டாரிக்குளம், பாடசாலை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தால் வீட்டில் இருந்த பெறுமதியான பொருள்கள் பல அழிவடைந்துள்ளன.

மாலை 4.30 மணியளவில் வீடு தீ பற்றிக் கொண்டமை அயலவர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடு வவுனியா வடக்கு உதவிப் பிரதேச செயலர் த.தர்மேந்திராவினுடையது. தீ விபத்து நடந்தபோது வீட்டில் எவரும் இருக்கவில்லை.

வீடு பூட்டியிருந்தபோது வீட்டிலிருந்து புகை கிளம்புவதை அவதானித்த அயலவர்கள் அங்கு சென்று பார்த்தபோதே வீட்டில் தீப் பற்றியமை தெரியவந்துள்ளது.

அயலவர்கள் தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கியமையுடன், தீயை அணைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். அயலர்களின் முயற்சியால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# வயிற்றில் உள்ள குழந்தைக்கும் வீடு வழங்கியுள்ளாராம் ரிஷாத்

## வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் அதன் தலைவர் கூறினார்



வவுனியா, டிசெ. 18

வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கும் ரிஷாத் பதியுதீன் வீடு வழங்கியிருந்தார் என வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தர்மபால செனவிரத்ன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரத்ன நியமிக்கப்பட்டிருந்தார். அவரது தலைமையில் நேற்று ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்றபோது, தனது ஆரம்ப உரையில் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலத்தில் அரசு இருந்ததா, இல்லையா என்பது தெரியவில்லை. அவ்வாறான நிலையிலேயே பல செயற்பாடுகள் இடம்பெற்றன.

ரிஷாத் பதியுதீன் முஸ்லிம்கள் மட்டுமே இங்கு இருக்கின்றனர் என நினைத்து பல வேலைத்திட்டங்களைச் செயற் படுத்தியிருந்தார். எனினும் நாம் அவ்வாறு செய்யப்போவதில்லை. இங்கு வாழும் மூவின மக்களுக்கும் சமமாக வளங்கள் பிரிக்கப்பட்டுக் கொடுக்கப்படும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான செயற்பாட்டை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபயவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியில் செய்யப்பட்ட பல வேலைத்திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன் மற்றும் சிவமோகனை மிரட்டி, ரிஷாத் பல வேலைகளைச் செய்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இது தொடர்பில் கதைக்கமாட்டார்கள்.

ஒரு குடும்பத்தில் மூன்று பேருக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. வயிற்றில் இருக்கும் பிள்ளைக்கும் ரிஷாத் பதியுதீன் வீடு கொடுத்துள்ளார்.

காணி இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன் பஸ் நிலையப் பிரச்சினைக்குத் தீர்வை காணுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வேலைத்திட்டங்களை மக்களை அலையவிடாமல் செய்யவேண்டும். அவ்வாறு இணைந்து வேலைத்திட்டத்தைச் செய்ய அனைவரும் முன்வர வேண்டும். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் எனது தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு இருக்கும்போது இங்கு இருக்க முடியாது – என்றார். (ஐ)

# ஜெனீவாவில் நிர்வாக அதிகாரியாக முதல் ஈழத்தமிழ்ப் பெண் கீர்த்தனா



ஜெனிவா, டிசெ. 18

சுவிஸ் – ஜெனிவா மாநிலத்தில் நிர்வாக அதிகாரி பதவிக்கு முதல்முறையாக, தாமரைச் செல்வன் கீர்த்தனா என்ற ஈழத் தமிழ்ப் பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்நாட்டு யுத்தத்தால் புலம்பெயர்ந்து வந்த பெற்றோர்களுக்கு பிறந்த இவர் சிறுவயதில் இருந்தே கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் பல சாதனைகளைப் படைத்துள்ளார்.

அந்த வகையில் கராத்தே தற்காப்புக் கலையை 6 வயதில் இருந்தே பயின்று வந்த இவர், தனது 18ஆவது வயதில் கறுப்புப் பட்டியை பெற்றுக் கொண்டார்.

இவர் கராத்தே ஆசிரியராக இருந்து வருவதுடன், தனது கல்வியிலும் பல்வேறு சாதனைகளைப் பதிவு செய்துள்ளார்.

உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா, இளநிலை முகாமைத்துவ கணக்கியல்மாணி என்ற பட்டங்களையும் அவர் பெற்றுள்ளார்.

அத்துடன் தனது திறமையால் உயர் அதிகாரியாக இன்று வலம் வரும் இவரைத் தமிழ் மக்கள் வாழ்த்துகின்றனர். (ஐ)

# நானாட்டான் இளம் குடும்பஸ்தரை காணவில்லையென முறைப்பாடு



மன்னார், டிசெ. 18

மன்னார் - நானாட்டான், நறுவிலிக்குளம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நானாட்டான் பிரதேச சபையில் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றும் தனது கணவரான நிமால் (வயது - 30) என்பவரே காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி கடந்த சனிக்கிழமை இரவு முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த இந்தக் குடும்பஸ்தர் கடந்த சனிக்கழமை காலை 8 மணியளவில் வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார். இரவாகியும் வீடு திரும்பாத காரணத்தால் அன்று இரவு 11 மணியளவில் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் மனைவி முறைப்பாட்டைப் பதிவு செய்திருந்தார்.

எனினும் 2 நாள்கள் கடந்தும் இது வரை குறித்த நபர் வீடு திரும்பவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

இவ் விடயம் தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலையத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,எவர் மீதும் சந்தேகம் கொள்ளும் படியான சம்பவங்கள் நடை பெறவில்லை. குடும்பப் பிரச்சினையும் இல்லை. யாழ்ப்பாணம், வவுனியா, மற்றும் உள்ளூர் பொலிஸ் நிலையங்களுக்கு இந்த நபர் தொடர்பான தகவல் கொடுக்கப்பட்டுள்ளதோடு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# போட்டியில் தோல்வியடைந்தாலும் எதிரணி வீரரை பாராட்டிய கோஹ்லி!

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்ற ஒருநாள் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரரைப் பாராட்டியுள்ளார்.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8 விக்கெட் இழப்புக்கு 287 ஓட்டங்களை பெற்றது.

ரிஷப் பந்த் 69 பந்துகளில் 7 பவுண்டரி, 1 சிக்சர் அடங்கலாக 71 ஓட்டங்களையும் , ஷிரேயஸ் அய்யர் 5 பவுண்டரி, 1 சிக்சர் அடங்கலாக 88 பந்தில் 70 ஓட்டங்களையும் கேதர்ஜாதவ் 35 பந்தில் 3 பவுண்டரி, 1 சிக்சர் அடங்கலாக 40 ஓட்டங்களையும் குவித்தனர்.

இதன்போது, கோட்ரெல் கீமோபவுல், அல்ஜாரி ஜோசப்தலா 2 விக்கெட்டும், பொல்லார்ட் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர், 288 ஓட்டங்கள் என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணி நிர்ணயித்த இமாலய இலக்கை 13 பந்துகள் எஞ்சியிருந்த நிலையில் எளிதில் அடைந்தது. 47.5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 291 ஓட்டங்களை குவித்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது மேற்கிந்திய தீவுகள் அணி. ஹெட்மயர், சி ஹோப் ஆகியோர் சதம் அடித்து வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தனர்.

எவ்வாறாயினும், இந்த தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில், நானும், ரோகித் சர்மாவும் சரியான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால் ரிப்பண்ட், ஷிரேயாஸ் அய்யர் ஆகிய இரண்டு இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. மெதுவான இந்த ஆடுகளத்தில் இருவரும் சிறப்பாக விளையாடினார்கள்.

மெதுவான பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் ஆடுகளம் இருந்தது. கேதர்ஜாதவ் பந்து வீசினார். ஆனால் மின்னொளியில் விளையாடுவது என்பது முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது.

என்னைப் பொறுத்தவரை மேற்கிந்திய தீவுகள் அணி வீரர்கள் உண்மையிலேயே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஹெட்மயர் பிரமாதமாக ஆடினார். ஹோப்பும் சிறப்பாக ஈடுகொடுத்து விளையாடினார்.

ஆனால் வேகப்பந்து வீரர்கள் சற்று சிரமப்பட்டார்கள். பந்தை பிடித்து நேர்த்தியாக வீச தீவிர நிலைமையை எதிர்கொண்டார்கள். இது ஒரு கடுமையான மாற்றம் இல்லை. ஆனால் சிறிய அளவில் மாற்றம் இருந்தது. ஒட்டு மொத்தத்தில் மேற்கிந்திய தீவு வீரர்கள் எங்களை விட நன்றாக விளையாடினார்கள் என்று தெரிவித்துள்ளார்.




## டோனியின் சாதனையை சமன் செய்த ஹெட்மயர்

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சவால் மிக்க போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெறுவதற்கு துடுப்பாட்ட வீரர்கள் முக்கிய காரணமாக அமைந்தனர்.



அந்த வகையில் 139 ஓட்டங்களை பெற்றதன் மூலம் டோனியின் சாதனையை மேற்கிந்திய தீவுகள் அணியின் ஹெட்மயர் சமன் செய்துள்ளார்.

சேப்பாக்கம் மைதானத்தில் 3ஆவது வீரராக களம் இறங்கிய ஹெட்மயர் வானவேடிக்கை நிகழ்த்தினார். 26 வயதான அவர் 106 பந்துகளில் 139 ஓட்டங்களைக் குவித்தார்.

இதில் 11 பவுண்டரிகளும், 7 சிக்சர்களும் உள்ளடங்குகின்றன. 41ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிய அவருக்கு இது 5ஆவது சதமாகும்.

139 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஹெட்மயர் புதிய சாதனை படைத்துள்ளார்.

வெற்றிகரமான 'சேசிங்கில்' அதிக ஓட்டங்களைப் பெற்ற மேற்கிந்திய தீவுகள் வீரர் என்ற சாதனையைபுரிந்தார்.

இதற்கு முன்பு 1999ஆம் ஆண்டு ரிக்கார்டோ போவெல் 124 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் அதனையும் முறியடித்தார்.

மேலும் இந்திய மண்ணில் வெற்றிகரமான சேசிங்கில் அதிக ஓட்டங்களை பெற்றவர்களில் 2ஆவது இடத்தைப் பிடித்தார். சனத் ஜெயசூர்ய 1997ஆம் ஆண்டு ஆட்டமிழக்காமல் 151 ஓட்டங்களை பெற்று முதல் இடத்தில் உள்ளார்.

சேப்பாக்கம் மைதானத்தில் 139 ஓட்டங்களை பெற்றதன் மூலம் ஹெட்மயர் அதிக ஓட்டங்களை பெற்று 2ஆவது இடத்தில் உள்ள டோனியை சமன் செய்தார்.

டோனி 2007ஆம் ஆண்டு ஆசிய லெவன் அணிக்காக சேப்பாக்கத்தில் ஆப்பிரிக்க லேவனுக்கு எதிராக 139 ஓட்டங்களை பெற்றிருந்தார். சயீத் அன்வர் 1997ஆம் ஆண்டு 194 ஓட்டங்களை குவித்ததே இன்னும் சாதனையாக இருக்கின்றது.

## ரோக்கியோ ஒலிம்பிக் அரங்க நிர்மாணப் பணிகள் நிறைவு!

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான அரங்கத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாக இன்னும் 7 மாதங்கள் உள்ள நிலையில் இந்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

60ஆயிரம்பேர் அமரக்கூடிவாறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்கத்துக்காக 140 கோடி டொலர்கள் செலவிடப்பட்டுள்ளன.

இந்த அரங்கில் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆரம்ப நிகழ்வு, இறுதி நிகழ்வு மற்றும் தடகளப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜுலை மாதம் 24 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை ரோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



## மேற்கிந்திய தீவுகள் அணிக்கு அபராதம்

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையில் சென்னை சேப்பாக்கம் எம். ஏ சிதம்பரம் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீச தாமதமாகியதால் சர்வதேச கிரிக்கெட் சபை அபராதம் விதித்துள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசத் தொடர் என இரு தொடர்களில் பங்கேற்கின்றது.

இந்தக் கிரிக்கட் சுற்றுப்பயணத்தின் முதல் தொடரான டி20 சர்வதேச தொடரை இந்திய அணி 2 -1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில் அடுத்த தொடரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் முதல் போட்டி கடந்த ஞாயிறு நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 13 பந்துகள் மீதமிருக்க 8 விக்கெட்டுக்களினால் அபார வெற்றி பெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. அதன்படி இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி பந்துவீச்சில் சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறையை மீறியதன் விளைவாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கட் சபையின் இலக்கம் 2.22 சரத்தில் குறிப்பிடும் அணித் தலைவர்கள், வீரர்களின் நடத்தை மற்றும் அவர்கள் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கும் சரத்தின்படி மேற்கிந்திய தீவுகள் அணியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இவ்வாறு குறைந்த பந்துவீச்சுப் பிரதி பதிவு செய்யப்படுமாயின் ஒரு ஓவருக்கு வீரரின் போட்டி ஊதியத்தில் 10 சதவீத அபராதத் தொகையும், அணியின் தலைவருக்கு அதன் இரட்டிப்புத் தொகையும் அபராதமாக விதிக்கப்பட்டு வந்தது.



ஆனால் தற்போதைய புதிய சட்டத்தின் பிரகாரம் அணித்தலைவர் என தனியாக இல்லாமல் ஒரு ஓவருக்கு போட்டியில் விளையாடிய அனைத்து வீரர்களுக்கும் 20 சதவீத அபராதம் விதிக்கப்படும்.

அதன் பிரகாரம் மேற்கிந்திய தீவுகள் அணி குறித்த நான்கு ஓவர்களையும் வீசுவதற்கு மேலதிக நேரம் எடுத்ததன் காரணமாக போட்டியில் விளையாடிய 11 வீரர்களுக்கும் ஒரு வீரருக்கு போட்டி ஊதியத்திலிருந்து 80 சதவீதம் அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

# தமிழர் தேச உரிமை மீட்புக்கு...

( 10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியும் மறைவும் எமக்கு உணர்த்தி நிற்பது என்னவெனில் – எவ்வளவுதான் பலம் வாய்ந்ததாக இருந்தாலும், எவ்வளவுதான் தார்மத்தின் பாற்பட்டதாக இருந்தாலும், தமிழர்கள் இந்தத் தீவில் வன்முறை அரசியல் செய்வது நடைமுறைச் சாத்தியமானதாக என்றைக்குமே இருக்கப்போவதில்லை என்பதாகும்.

அத்தோடு, இராணுவ பலத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, உலக ஓட்டத்திற்கு ஒத்திசைவு இல்லாத அரசியல் கோட்பாட்டின் ஊடாகக் கட்டி எழுப்பப்படும் எந்த ஒரு போராட்டமும் நின்று நிலைக்காது என்பதுமாகும். அந்த வகையில்தான் – அனைத்துலகப் பரிமாணங்களுடன் பிறந்திருக்கின்ற தற்போதைய புதிய சூழலில், அந்தச் சூழலுக்கு ஏற்ற வகையான நெகிழ்வுத் தன்மைகளுடன், சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனும் பக்கபலத்துடனும் எமது உரிமைப் போராட்டத்தை நகர்த்திச் செல்லும் புதிய வழிமுறைகளை நாம் கையாளத் தொடங்கியுள்ளோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அதன் தந்தையர்கள் கொண்டிருந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து விலகிச் செல்கின்றது என்றோ, அல்லது, தான் தலைமையேற்றிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைத் தவறான தடத்தில் வழி நடத்திச் செல்ல முனைகின்றது என்றோ எவரும் அர்த்தப்படுத்திவிடக் கூடாது. பேரம் பேசுவதற்கு அடிப்படையான அகப்பலம் எல்லாம் அழிந்தொழிந்து போன பின்னர், நிர்க்கதியாகி, இருள் சூழ்ந்த அரசியல் எதிர்காலத்தை எதிர்நோக்கி நிற்கும் எமது மக்களுக்கு, இன்று இருக்கும் ஒரே நம்பிக்கை ஒளி – அனைத்துலக சமூகம் எமது தேசிய போராட்டத்தின் மீது, நியாயத்தின் அடிப்படையில் கொண்டிருக்கின்ற ஈடுபாடுதான். அதுதான் எம்மோடு இப்போது சேர்ந்திருக்கின்ற புதிய புறப்பலம். முன்பொரு தடவை இந்தியாவுடன் எழுந்த கருத்து வேறுபாடு, இருபது வருடங்களாக அந்த நாட்டை எம்மிலிருந்து அகன்று நிற்கவைத்தது மட்டு மன்றி, எமக்கு எதிராகவும் செயற்பட வைத்தது என்ற வரலாற்றுப் பாடத்தை நாம் மறந்துவிடக் கூடாது. இன்னொரு தடவையும் நாம் அவ்வாறே செயற்பட்டு, அனைத்துலக சமூகத்தை எம்மிலிருந்து அந்நியப்படுத்திவிடக் கூடாது என்பதுதான் எமது அக்கறை. அனைத் துலகச் சமூகத்தைச் சங்கடப்படுத்தாத வகையில் அனுசரித்துப் போக நாம் செய்யும் சில மென்போக்கான விட்டுக்கொடுப்புகள் என்பவை, எமது இராஜதந்திரத்தின் நுட்ப நகர்வுகளே அல்லாமல், எமது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடுவதற்கான சமிக்ஞைகள் அல்ல.

'ஒற்றையாட்சி இலங்கை' என்ற அமைப்பிற்கு வெளியே, 'ஐக்கிய இலங்கை' என்ற அரசமைப்பிற்குள், தமிழர்கள் சுயமரியாதையுடனும், தன்னிறைவுடனும் வாழத் தேவையான ஆகக்கூடிய அரசியல் அதிகாரங்களை உள்ளடக்கிய ஓர் ஆட்சியலகையே தமிழ் தேசிய இனத்தின் இறையாண்மைப் பிரச்சினைக்கான தீர்வாக நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இத்தகைய அதிகாரங்களைக் கொண்ட ஓர் ஆட்சியலகிலேயே – எமது இனத்திற்கு நீக்கமற உரித்தான – உள்ளக சுயநிர்ணய உரிமை பூர்த்தியடைய முடியும் என நாம் நம்புகின்றோம்.

இந்த ஆட்சியலகின் விட்டுக்கொடுக்க முடியாத அடிப்படையாக இருக்க வேண்டியது – இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்குப் பிராந்தியங்களை உள்ளடக்கிய, தமிழ் பேசும் மக்களின் பிரிக்கப்படாத வரலாற்று வாழ்விடமாகும். இந்த ஆட்சியலகில் – நமது நிலத்தை நாமே ஆளுகை செய்து, நமது சமூகத்தை நாமே பாதுகாத்து, நமது பொருளாதாரத்தை நாமே வளப்படுத்தி, நமது பண்பாட்டை நாமே செழுமைப்படுத்தும் அதிகாரங்கள், எத்தகைய இடையூறுகளுமற்று உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஆட்சியலகிற்கான அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் முன்னெடுப்பானது – 1987ஆம் ஆண்டு, சிறீலங்காவின் அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தினை விடவும் மேலே உள்ள ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி, அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வைத் தருவதாகப் பரிணமிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனையே எமது கட்சியின் நிலைப்பாடும் ஆகும். இந்த நிலைப்பாட்டினை நாம் எடுத்ததற்கான காரணம் – 13ஆவது சட்டத் திருத்தத்தையே ஒரு நேர்த்தியான தீர்வாக நாம் ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்பதோ, அல்லது, மேற்குறிப்பிட்ட வகையிலான எமது உள்ளகச் சுய நிர்ணய உரிமை தொடர்ந்தும் மறுக்கப்படும் சூழலில், சர்வதேசச் சட்ட நியதிகளின் அடிப்படையில் எமக்கிருக்கும் புறவயச் சுயநிர்ணய உரிமையை நாம் பிரயோகிக்கமாட்டோம் என்பதோ அல்ல; மாறாக, இதுவே, இன்றைய சூழலில் நடைமுறைச்சாத்தியமான ஒன்றாக இருப்பதனாலாகும்.

மேலும், எமக்கான அரசியல் அதிகாரங்கள், இந்தியாவினதும் அமெரிக்கா உள்ளிட்ட உலக சமூகத்தினதும் அநுசரணையுடனும் துணையுடனுமே பெறப்படவேண்டியுள்ள தற்போதைய சூழலில் – அவற்றைப் பெறுவதற்கு நாம் முன்வைக்கும் மேற்படி தீர்வுப் பொறிமுறையானது, நியாயமான ஒன்று என அவர்களால் கருதப்படத் தக்கதாகவும் இருக்கும்.

மேலும், ஐக்கிய இலங்கைக்குள்ளான அரசியல் பொறிமுறை ஒன்றைத் தீர்வாகப் பெறக்கூடிய தன்மையே தற்போது நிலவுவதால், எம்மால் முன்வைக்கப்படும் மேற்கூறப்பட்ட தீர்வு யோசனை – இலங்கைத் தீவிற்குள் வாழும் எந்தத் தரப்பினராலும் எதிர்க்க முடியாத வகையில் நியாயப்பாடு உள்ளதாகவும் இருக்கும்.

குறிப்பாக – தமிழ் தேசிய இனத்தின் இறையாண்மைப்பிரச்சினைக்கு நாம் காண முற்படும் எந்த ஒரு தீர்வும், தமிழர் தாயகத்தில் வாழும் முஸ்லீம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு கட்டமைப்பாக அமைய வேண்டும். அது அவர்களது சமூக – பொருளாதார – அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்; அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய பொறிமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.

'ஒன்றுபட்ட இலங்கை' என்ற அமைப்பிற்குள், தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு, எமது அரசியல் – குடியியல் – பொருளாதார – சமூக – பண்பாட்டு அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதமான ஓர் ஆட்சியலகை ஏற்படுத்த இந்தத் தீவின் ஆட்சியாளர்கள் மனப்பூர்வமாக முன்வரவேண்டும். அந்தத் தீர்வானது, தமிழ் பேசும் மக்கள், தமது அபிலாசைகள் தொடர்பான தமது ஜனநாயகத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டத் தகுதி உடையதாக அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

# சம்பவத்தை இட்டுக்கட்டினார் சுவிஸ் தூதரக பெண் ஊழியர்

## சட்ட மா அதிபர் தரப்பு கூறுகிறது

கொழும்பு, டிசெ. 18

சுவிஸ் தூதரகப் பெண் பணியாளரான சந்தேகநபரை நம்ப முடியாது. அவரது அறிக்கை முரணானது. நாட்டின் பெயரைக் கெடுக்க அவர் ஏன் இத்தகைய சம்பவத்தை இட்டுக்கட்டினார் என்பதை நாங்கள் விசாரிக்க வேண்டும் என்று சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான அரச சட்டவாதி மன்றில் கூறினார்.

கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் நேற்று முன் தினம் மாலை சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலை அடுத்து, குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் கொழும்பு பிரதம நீதிவான் லங்காஜயரத்ன முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

இதன்போது அரச சட்டவாதி, கடந்த இரண்டு நாள்களாகக் குற்ற விசாரணைத் திணைக்களம் விசாரணையை நடத்தி சந்தேகநபரிடமிருந்து பல வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளது.

விசாரணை ஆரம்பமாகி அது ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் சென்ற பின், இந்தச் சம்பவம் தொடர்பாக அளிக்கப்பட்ட முதல் முறைப்பாட்டுக்கு மாறாக ஏராளமான தகவல்கள் வெளிவந்தன என்று தெரிவித்தார்.

சுவிஸ் தூதரக இரண்டாவது அதிகாரி ராகுல் இம்பச், இந்தச் சம்பவம் தொடர்பாக செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குற்ற விசாரணைப் பிரிவு அவரிடம் முதலில் வாக்குமூலம் பதிவு செய்தது.

முதல் முறைப்பாட்டின் படி, அப்போது பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் கானியர் பனிஸ்டரின் அடையாளம் சரியாக வெளியிடப்படவில்லை. தூதரக அதிகாரி அளித்த எழுத்துமூல முறைப்பாட்டில், பாதிக் கப்பட்டவரின் பெயரைக் குறிப்பிடாமல் வி என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

பெற்றோர்– ஆசிரியர் கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் சென். பிரிட்ஜெட் கொன்வென்ட் முன் கடத்தப்பட்டார், என்று அவர் கூறியிருந்தார்.

அவரது கடிதத்தில், பாதிக்கப்பட்டவர் பாடசாலையில் இருந்து வெளியே வந்தபோது, இனம்தெரியாத ஐந்து நபர்களால் கடத்தப்பட்டார் எனவும், அவர் ஒரு வெள்ளைக் காரில் அழைத்துச் செல்லப்பட்டார் என்றும் கூறப்பட்டிருந்தது.

சம்பவத்தின்போது அவர் இரண்டு மணி நேரம் விசாரிக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டார். சி.ஐ.டி. விசாரணை அதிகாரி நிசாந்த சில்வா குறித்தும் அவரிடம் விசாரிக்கப்பட்டதுடன், அவருக்கு விசா வழங்கப்பட்டது குறித்தும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது.

முதல் முறைப்பாட்டின்படி நடத்தப்பட்ட விசாரணைகளில், சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட நவம்பர் 25ஆம் திகதியன்று, அந்தப் பாடசாலையில், பெற்றோர் – ஆசிரியர் கூட்டம் எதுவும் நடத்தப்படவில்லை எனத் தெரியவந்தது.

பாடசாலைக்கு உள்ளேயும் அதைச் சுற்றியுள்ள சி.சி.ரி.வி. காட்சிகள் பெறப்பட்டு ஆராயப்பட்டபோதும் எந்தத் தகவலையும் பெற முடியவில்லை.

பின்னர், பாடசாலையில் இருந்த பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அவரது அலைபேசி எண் பெறப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. அவர் பயணம் செய்ததாகக் கூறப்படும் ஊபர் வாடகைக் காரின் சாரதியை கண்டுபிடித்து அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அவரது படத்தைக் காண்பித்தபோது, சாரதி அடையாளம் கண்டுகொண்டார். நவம்பர் 25ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில், பல்மேரா அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்துக்கு அருகே அவரை இறக்கி விட்டார் எனக் கூறினார்.

அதேவேளை பின்னர், கானியர் பனிஸ்டர் பிரான்சிஸ், சி.ஐ.டியினருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில், சென். பிரிட்ஜெட் கொன்வென்ட்டில் கற்பிக்கும் ஓர் ஆசிரியர் சுவிஸ் செல்வதற்கான விசா ஆவணங்க ளைத் தயாரிப்பதற்கு உதவுவதற்காக, அவரது பல்மேரா அடுக்குமாடிக் குடியிருப்புக்குச் சென்றார் எனக் கூறியுள்ளார்.

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பிலேயே சம்பவம் நடந்ததாகவும், இனந்தெரியாத நபர்களால் தாம் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, தாக்கப்பட்டார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

நவம்பர் 25ஆம் திகதி, அந்த அடுக்குமாடிக் குடியிருப்புக்கு பிற்பகல் 3.30 மணிக்குச் சென்றிருந்த பெண் அதிகாரி மாலை 5.01 மணிக்கு அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

சம்பவம் நடந்த நேரம் குறித்து கேள்வி எழுப்பியபோது, மாலை 5.01 மணிக்குப் பின்னர் இந்த சம்பவம் நடந்ததாகவும், அதைத் தனது கணவருக்கு தெரிவித்தார் என்றும் அவர் கூறினார்.

எனினும், பல்மேரா அடுக்குமாடி வளாகத்தில் உள்ள சி.சி.ரி.வி. காட்சிகள் மாலை 5.01 மணிக்குச் சந்தேகநபர் குடியிருப்பில் இருந்து வெளியே பெண் ஒருவருடன் சென்று கொண்டிருந்ததைக் காட்டுகின்றன.

ஆனால் நவம்பர் 25 மாலை 5.01 மணிக்குப் பின்னர் இந்தச் சம்பவம் அடுக்குமாடிக் குடியிருப்பில் நடந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், குற்ற விசாரணைத் திணைக்களத்தின் விசாரணைகளை தவறாக வழிநடத்த, சந்தேகநபரான அந்தப் பெண் வெவ்வேறு கதைகளைத் தயாரிக்க முயன்றார் என்பது தெளிவாகியுள்ளது.

மாளிகாவத்தையில் உள்ள சந்தேகநபர் கானியர் பனிஸ்டர் பிரான்சிஸின் குடியிருப்புக்கு நவம்பர் 27ஆம் திகதி சென்றபோது, அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரி வெளிநாட்டுக் குச் செல்வதாகக் கூறி அவரது குடும்பத்தினர் 26ஆம் திகதி சென்றார் எனக் கூறினார்.

எனினும், அவரும் அவரது குடும்பத்தினரும் சம்பவத்துக்குப் பின்னர் சுவிஸ் தூதுவரின் இல்லத்திலேயே தங்கியுள்ளனர். அவரது இருப்பிடத்தைக் கண்டறிய முடியாதிருந்ததால், முன்னரே வாக்குமூலம் பெற முடியாமல் போனது.

அவரது மருத்துவ அறிக்கைகளில் உடல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

விசாரணைக்காக அவரது அலைபேசியை வழங்குமாறு கேட்டபோதும் அவர் மறுத்துவிட்டார்.அலைபேசி தூதரகத்தில் இருப்பதாக அவர் கூறினார்.

அனைத்து தகவல்களையும் கணக்கில் எடுத்துக் கொண்ட பின்னரே, பாதிக்கப்பட்ட நபராகக் கருதப்படும் இந்த நபரைச் சந் தேக நபராகப் பெயரிட சட்ட மா அதிபர் முடிவு செய்துள்ளார்.

விசாரணைகளின் படி, அவர், குற்றவியல் நடைமுறை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 120 மற்றும் 190 ஆகியவற்றின் கீழ் குற்றமிழைத்துள்ளார்.

அவரை நம்ப முடியாது. அவரது அறிக்கை முரணானது. நாட்டின் பெயரைக் கெடுக்க அவர் ஏன் இத்தகைய சம்பவத்தை இட்டுக்கட்டினார் என்பதை நாங்கள் விசாரிக்க வேண்டும் என்றும் அரச சட்டவாதி கூறினார்.

இதன் போது, சுவிஸ் தூதரகப் பணியாளர் சார்பில் முன்னிலையான சட்டவாளர் உபுல் குமாரப்பெரும, குறிப்பிட்ட ஆசிரியரின் குடியிருப்புக்கு வந்த அடையாளம் தெரியாத மூன்று ஆண்களே அவரைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கினர் என்று நீதிவானிடம் குறிப்பிட்டார்.

அப்போது, அவர் உடனடியாக ஏன் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவில்லை என்று நீதிவான் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சட்டவாளர் குமாரப்பெரும, எங்காவது முறைப்பாடு செய்தால், அவரது குடும்பத்தைக் கொன்று விடுவோம் என அடையாளம் தெரியாத நபர்கள் அச்சுறுத்தியிருந்தனர்.

அதிர்ச்சி மற்றும் பயத்தினால் இந்தச் சம்பவம் குறித்து எந்த உண்மையையும் வெளிப்படுத்த அந்தப் பெண் விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

இரு தரப்பு விண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான் சந்தேகநபரான சுவிஸ் தூதரகப் பணியாளரை எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

# தூதரக ஊழியர் கடத்தல் பொய் என்பது அம்பலம்!

கொழும்பு, டிசெ. 18

ஐக்கிய தேசியக் கட்சியினால் அரகேற்றப்பட்ட சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் நாடகம் பொய்யென்பது அம்பலமாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய அரசு மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக சேறு பூசும் விதமாக நடத்தப்பட்ட நாடகமே சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தல் விவகாரமாகும்.

இவ்வாறு அரகேற்றப்பட்ட நாடகம் பொய்யென்பது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுவிஸ் தூதரக ஊழியரைச் சிறையில் வைத்து விசாரணை செய்வதால் மாத்திரம் இந்த விவகாரத்தில் முழுமையான உண்மையை பெறமுடியாது.

இந்த நாடகத்தை உருவாக்கியது ஐக்கிய தேசியக் கட்சி. அதற்குச் செயல் வடிவம் கொடுத்தது ராஜித சேனாரத்ன.

இதில் நடிப்பை மாத்திரம் வெளிப்படுத்திய சுவிஸ் தூதரக ஊழியரை மாத்திரம் வைத்து உண்மைதன்மையைக் கண்டறிய முடியாது.

எனவேதான் இந்த நாடகத்துக்கு முக்கிய காரணமானவர்களுக்கு எதிராகவே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். – என்றார். (ஐ)


# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
## 70 ஆண்டுகள் நிறைவு விழா



காலம்: 18 - 12 - 2019 புதன்கிழமை, மு.ப. 9.30 மணி
இடம்: இளங்கலைஞர் மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

**தலைமை: மாவை. சோ. சேனாதிராசா, பா.உ.**

**நிகழ்ச்சி நிரல்**

1. தமிழரசு இயக்கப் பண்
2. தமிழரசுக் கொடியேற்றம்
3. தமிழ்மொழி வாழ்த்து
4. வரவேற்புரை, தொடக்கவுரை - திரு. சிவஞானம் சிறீதரன், பா. உ.
5. ஆசியுரைகள்
6. தலைமையுரை
7. (அ) வாழ்த்துரை - அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
 முன்னாள் பேராயர்,சி.எஸ்.ஐ, தலைவர், தந்தை செல்வா அறங்காவற்குழு
 (ஆ) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் உரைகள்
8. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் உரைகள்
 (அ) திரு. சி. வி. கே. சிவஞானம்
 "70 ஆண்டுகளில் தமிழரசுத் தலைவர்கள் மாண்புகளும், ஆளுமையும்"
 (ஆ) திரு. க. துரைராஜசிங்கம்
 "அரசியலில் 70 ஆண்டுகள் தமிழரசுக் கட்சியின் தீர்மானங்கள், பரிணாமமும் வகிபாகமும்"
 (இ) திரு. எம். ஏ. சுமந்திரன், பா.உ.
 70 ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியின் நீதிமன்ற வழக்குகள்; தமிழரசுக் கட்சிக்கெதிரான அரசுகளின் வழக்குகள்; உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள், ஐ.நா.மனித உரிமைப் பேரவைத் தீர்மானங்கள்
 (ஈ) திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா பா.உ.
 "இனவிடுதலைப் போரில் தமிழ்ப் பெண்கள் வகிபாகமும், விளைவுகளும்"
 (உ) தமிழரசு மாதரணி, இளைஞர் அணியின் பிரதிநிதிகள் உரைகள்
9. பிரதான உரை:
 திரு. இரா. சம்பந்தன், பா.உ.
 "70 ஆண்டுகளிலும் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகள், சர்வதேசம், இந்தியா, ஐ.நா.மனித உரிமைப் பேரவைக்கான முறையீடுகள்; எதிர்காலம்"
10. நன்றியுரை - திரு. பெ. கனகசபாபதி

தமிழரசு உறுப்பினர், அபிமானிகள் அனைவரும் அணிதிரண்டு வருகைதந்து பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி**

# கூட்டமைப்பே தஞ்சம் வெளியேறமாட்டோம்

## அடித்துச் சொல்கிறார் சித்தார்த்தன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் அதனைப் பேசித் தீர்க்கவே முனைகிறோம். கூட்டமைப்பிலிருந்து வெளியேறுவது எங்கள் நோக்கமல்ல. மாற்று அணியில் இணைவது பற்றியும் சிந்திக்கவில்லை. அதற்கான தேவையும் ஏற்படவில்லை. கூட்டமைப்புக்குள்ளேயே தொடர்ந்தும் நாங்கள் இருப்போம்.

– இப்படிக் கூறியிருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் தலைவருமான த. சித்தார்த்தன்.

கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் உள்ளன. புளொட்டும் ரெலோவும் பேசி இந்த முரண்பாடுகளை முற்றிப் போகாமல் எமக்குள்ளே தீர்க்க முயற்சிக்கின்றோம்.

மூன்று கட்சிகளும் தேர்தல் தொடர்பில் ஒரு சரியான நிலைப்பாடு எடுத்து ஒவ்வோரு கட்சிக்கும் எத்தனை ஆசனங்களை ஒதுக்கமுடியுமென்பதை இப்போதே தீர்மானித்து அதற்கான செயற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதைத்தான் கேட்டிருந்தோமே தவிர நாங்கள் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

பங்காளிகளான எங்களுக்குரிய இடங்கள் வேண்டும் என்பதை தெளிவாகக் கூறி மூன்று கட்சிகளுக்குள்ளேயும் ஓர் ஒற்றுமைப்பாட்டைக் கொண்டு வரவேண்டும் எனக் கேட்டிருக்கிறோம். அதில் விட்டுக் கொடுப்புக்கள் இருக்கலாம். இதை ஒரு பெரிய முரண்பாடாக எடுத்து கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு போய்விடுவோம் என்றில்லை.

இந்த மூன்று கட்சிகளுமாவது ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பது தான் எங்கள் கோரிக்கை.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பார்த்தால் கிளிநொச்சியிலும் அம்பாறையிலும் ஒரு வேட்பாளரைக்கூட நாங்கள் போட முடியவில்லை. கூட்டமைப்பை உடைப்பதெனில் அப்போதே உடைத்துக் கொண்டு போயிருக்க வேண்டும். இருந்தும் ஒற்றுமை காரணமாக அவ்வாறு செய்யாமல் நாங்கள் இருந்தோம்.



அந்த நிலை இனியும் வரக்கூடாது என்பதற்காகத்தான் இப்போது பேசித் தீர்மானிக்க எண்ணியிருக்கின்றோம்.

எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு எடுக்கப்படும் எல்லாத் தீர்மானமும் கட்சிகளுடன் ஆராயப்பட்டு அல்லது கலந்தாலோசிக்கப்பட்டு எடுக்கப்படவேண்டும் என்பது கட்டாயமான விடயம். அதை நாங்கள் வலியுறுத்துவோம்.

கூட்டமைப்புக்குள் நாங்கள் விடயங்களைப் பேசுவதுண்டு. ஆனால் சில நேரங்களில் தமிழரசுக் கட்சியினர் தீர்மானங்களை எடுத்துவிட்டு அதனை எம்மிடம் கூறுவதும் உண்டு. அவ்வாறு செயற்படுவது ஜனநாயகக் கூட்டுத் தலைமை அல்ல. எல்லோருமாகக் கூடிப் பேசிவிட்டு முடிவெடுப்பது தான் ஜனநாயகக் கூட்டு. அதை இனிமேல் செய்தால் மிகச் சிறப்பாக இருக்கும். இனத்துக்கும் நல்லது. தவறுகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தலைமையில் உருவாகும் மாற்று அணியில் இணைந்து கொள்ளும் நோக்கம் எங்களுக்கு இல்லை. இதுவரை நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவிட்டு வெளியில் வருவதாக எந்தவொரு நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. இரண்டு கூட்டுக் கட்சிகளில் கூட்டாக இருக்க முடியாதுதானே. ஆக ஒரு கூட்டில் தான் இருக்க முடியும். அதனடிப்படையில் இப்போது நாங்கள் கூட்டமைப்பில் இருக்கின்றோம். அதிலிருந்து விலகுவதாகவோ அல்லது வெளியேறுவதாகவோ நாங்கள் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆகவே நாங்கள் கூட்டமைப்பில் தான் இருக்கிறோம் – என்றார். (ஐ – 07)

## நீதிமன்ற வளாகத்தினுள் பெண் குத்திக் கொலை!

கொழும்பு, டிசெ. 18

வழக்கு நடவடிக்கைக்காக கேகாலை மேல் நீதிமன்றத்துக்கு வந்திருந்த பெண்ணொருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவராலேயே அவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

தாபரிப்பு வழக்குக்காக நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

## தப்பியோடிய கைதியை சுட்டுப் பிடித்த பொலிஸ்!

கொழும்பு, டிசெ. 18

ஹோமாகம நீதிமன்றத்தில் இருந்து தப்பிக்க முற்பட்ட சிறைக் கைதி ஒருவர் மீது சிறைச்சாலை அதிகாரி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த சிறைக்கைதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நீதிமன்றத்திற்கு அருகில் நடந்த இந்தச் சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

## வெலிக்கடைச் சிறையில் சுவிஸ் தூதரகப் பணியாளர்

கொழும்பு, டிசெ. 18

கானியா பெனிஸ்டர் பிரான்சிஸ் என்ற சுவிஸ் தூதரகப் பணியாளரை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய அவர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

தூதரகப் பணியாளர் நேற்று முன் தினம் இரவு, சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டார் எனச் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரி வித்தன. (ஐ)

## போதைப்பொருள் கடத்தி வந்த இருவர் மட்டக்களப்பில் கைது !

மட்டக்களப்பு, டிசெ. 18

கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த பஸ்ஸில் ஹெரோய்ன் போதைப் பொருள் கடத்தி வந்த இருவரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பு சத்துருக் கொண்டான் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 988 மில்லிகிராம் ஹெரோய்னையும் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சமந்த தலைமையிலான புலனாய்வு பிரிவினர் சத்துருக் கொண்டான் பகுதியில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் காத்திருந்து இவர்களைக் கைது செய்தனர்.

கொழும்பில் இருந்து காத்தான்குடிக்குப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸை நிறுத்தி இந்த இருவரையும் சோதனையிட்டபோது ஒருவர் தனது மலவாசல் பகுதியிலும் மற்றவர் நீள் காற்சட்டைப் பொக்கற்றினுள்ளும் ஹெரோயினை மறைத்து எடுத்து வந்ததைக் கண்டுபிடித்தனர் .இருவரிடமிருந்து 988 மில்லிகிராம் ஹெரோய்னை மீட்டதுடன் இருவரையும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் ஏறாவூர் தாமரைக்கேணி மீச்சு நகரைச் சேர்ந்த 30 வயது மற்றும் 20 வயதுடையவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 6 இலங்கை அகதிகள் தனுஸ்கோடியில் கைது

சென்னை, டிசெ. 18

தமிழகத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குத் தப்ப முயன்ற 6 இலங்கை அகதிகளை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கியூ பிரிவு பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, தனுஷ்கோடி அருகே எம்.ஆர் சத்திரம் பஸ் நிலையத்தில் சந்தேகத்திற்குரிய முறையில் நின்று கொண்டிருந்த 6 பேரை விசாரணை செய்துள்ளனர்.

அந்த விசாரணையில், அவர்கள் திருகோணமலை மற்றும் யாழ்பாணம் பகுதியை சேர்ந்த இலங்கை அகதிகள் எனவும், ஆறு பேரும் சென்னை மற்றும் திருவள்ளூர் பகுதிகளிலுள்ள முகாம்களில் வசித்து வந்தவர்கள் என்றும், தனுஷ்கோடி கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் தோணியில் இலங்கைக்குத் தப்பிச் செல்ல இருந்தனர் என்றும் தெரியவந்தது.

இதனையடுத்து ஆறு பேரையும் கைது செய்த கியூ பிரிவு பொலிஸார், வழக்குப் பதிவு செய்து தனுஷ்கோடி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## 63 இராணுவ அதிகாரிகளை பதவி உயர்த்தினார் கோட்டா

கொழும்பு, டிசெ. 18

இலங்கை இராணுவத்தின் 63 அதிகாரிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

நான்கு இராணுவ அதிகாரிகள் மேஜர் ஜெனரல் ஆகவும், 25 இராணுவ அதிகாரிகள் பிரிகேடியர்கள் ஆகவும், மற்றும் 34 இராணுவ அதிகாரிகள் லெப். கேணல்கள் ஆகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இராணுவத் தளபதியின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி கோட்டாபயவால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலவசப் பாடநூல் விநியோகம் 95 வீதப் பணிகள் பூர்த்தியாம்!

கொழும்பு,டிசெ.18

மாணவர்களுக்கு அடுத்த ஆண்டுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கை 95 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் ஜனவரி மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகும் போது சகல மாணவர்களுக்கும் பாடநூல்களை விநியோகிக்க இருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

எஞ்சிய பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் கல்வியமைச்சின் வெளியீட்டு ஆணையாளர் நாயகம் ஜயந்த விக்ரமநாயக்க தெரிவித்தார். பாடநூல்களை விநியோகிக்கும் நடவடிக்கை சகல மாகாணங்களை உள்ளடங்கிய வகையில் இடம்பெறுகிறது.

ஆயிரத்திற்கும் 500 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கான பாடநூல்களை விநியோகிக்கும் பணி திணைக்களத்தினால் நேரடியாக மேற்கொள்ளப்படுவுள்ளதாகவும், ஏனைய பாடசாலைகளுக்கு வலயக் கல்வி காரியாலங்கள் ஊடாக அது மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனநாயகத்தைச் சுட்டு விழுத்தியவர் நீங்களே!

# சம்பந்தனைத் தாக்கி அவருக்கே சங்கரி கடிதம்



யாழ்ப்பாணம்,டிசெம்பர்18

**புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு ரெலோ அமைப்பின் ஒரு பகுதியினர் எடுத்துள்ள புதிய நகர்வு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் குந்தகமாக அமையும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்குத் தாம் நேற்று அனுப்பிய கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.**

மிக மிக அக்கறையுடன் ஆரம்ப காலத்திலிருந்து மக்களால் அனுசரித்து பேணிக் காக்கப்பட்ட ஜனநாயகத்தைச் சுட்டு விழுத்தியவர் நீங்களே என்று சம்பந்தரை அக்கடிதத்தில் மிகக் காட்டமாகத் தாக்கியுள்ளார் சங்கரி.

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

எமது மக்களுக்கும் உங்களுக்கும் தொடர்புடைய பல விடயங்கள்பற்றி எதுவித விமர்சனங்களும் செய்யாது மிகவும் பொறுமையாக இயங்கிவந்தேன். நீங்கள் ஒரு திறமைசாலி. அதில் சந்தேகமில்லை.

ஆனால் உங்களுடைய திறமையை உங்களுடைய சொந்த நலனுக்கு மிகவும் பயன்படுத்தியுள்ளீர்கள். அதனால் எமது மக்களுக்கும் பெருமளவில் நாட்டுக்கும் அழிவு ஏற்பட்டது.

புதிய அரசியல்கட்சியொன்றை உருவாக்கும் நோக்கத்தோடு ரெலோ அமைப்பு எடுத்துள்ள நடவடிக்கையானது, நாட்டிற்கு அழிவைக் கொண்டுவந்த தங்களுடைய கடந்தகால நடவடிக்கைகளைக் கவனத்தில் எடுக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருப்பதால் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

யாரேனும் ஒரு கட்சியை பிளவுபடுத்த அல்லது புதிதாக ஆரம்பிக்க முன்னர் தங்களுடைய முடிவை மீளப் பரிசீலனை செய்து, நேர்மையாக இயங்கும் தார் மீக கடமையும் உரிமையும் கொண்ட இருபெரும் தமிழ்த் தலைவர்களால் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

இவ்விரு தலைவர்களும் காலத்தின் தேவைக்கேற்ப நாட்டிற்குப் பொருத்தமாக அமைந்தனர்.

ஆனால், ஜனநாயகத்தை முதற் சுட்டு வீழ்த்தியவர்கள் நீங்களே என்பதோடு தமிழர் விடுதலைக் கூட்டணியையும் முற்றாக அழிக்க மிகவும் பாடுபட்டீர்கள். நாடாளுமன்றத்தில் நான் ஆற்றிய உரைகள் சிலவற்றை எனக்கு பக்கத்தில் இருந்து கேட்ட உங்களுக்கு இப்போது அவற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்தை எதிர்ப்பக்கத்தில் அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்து "நீங்கள் 10 ஆண்டுகள் போராடினாலும் பளையைக் கைப்பற்ற முடியாது எனச் சொன்னேன். ஆனையிறவு முகாமைக் கைப்பற்றுவது பகற்கனவு" எனவும் குறிப்பிட்டேன்.

"மேலும் இன்னுமொருதடவை எமது 35ஆயிரம் போர்வீரர்களைக் காப்பாற்றித் தாருங்கள் என உலகநாடுகளிடம் கோரிக்கை விட வேண்டிய நிலைமை மீண்டும் ஏற்படாது என எண்ணாதீர்கள்!" – என்றேன்.

ஒரு சமயம் நாடாளுமன்றத்திலே "யசீர் அரபாத் போன்று பிரபாகரன் அவர்களும் உலகம் சுற்றி வருகின்ற காலம் விரைவில் வரும்" – எனவும் குறிப்பிட்டேன்.

அதேசமயம், சில வன்முறையோடு சம்பந்தமான பிரபாகரனின் நடவடிக்கைகளை கண்டித்துள்ளேன். அவருடைய சொந்த நலன் கருதியே அடிக்கடி இத்தகைய சில குற்றங்களைச் சுட்டிக்காட்டியுள்ளேன். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? அவர்களுடன் இருந்துகொண்டு அவர்களின் எல்லா செயற்பாடுகளையும் உசுப்பிவிட்டு விட்டு, பின்னர் அவர்களைத் தோற்கடித்த இராணுவத் தளபதி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சி வேட்பாளராக போட்டியிட்டபோது வீடுவீடாகச் சென்று அவருக்கு வாக்குச் சேர்த்துக் கொடுத்தீர்கள்.

விசுவாசமாக நான் துரோகம் செய்தேனா அல்லது வேறு யாரும் செய்தார்களா என்பதை இப்போதாவது கூறுங்கள்.

திருகோணமலையில் 14.05.1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியுடைய அங்குரார்ப்பண நிகழ்வில் இரு கட்சிகளையும் சார்ந்த சகலரும் வேறு சிறிய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஆரம்பகால உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இடதுசாரிக் கட்சிகளும், ஆயுதக் குழுக்களின் அரசியல்பிரிவுகளும் எம்முடன் இணையவில்லை. இந்த இணைப்பு உலகளாவிய தமிழ்மக்கள் மத்தியில் ஒற்றுமைக்காக ஏற்பட்ட மிகப் பெரிய அரசியல் நகர்வாகக் கொண்டாடப்பட்டது.

அந்தக் காலத்தில் நீங்கள் நான் அறிய அரசியலில் இல்லை. மேலும் அன்று காலையில் நடைபெற்ற உத்தியோகத்தர்கள் தெரிவின்போது அதில் கலந்து கொள்ளவுமில்லை. ஆனால் அன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் பட்டுவேட்டியுடன் நீங்கள் கலந்துகொண்டமையை நான் அவதானித்தேன். 1977ஆம் ஆண்டுதான் கூட்டணி அமைந்ததன்பின் நடந்த பொதுத்தேர்தலில் நீங்கள் திருகோணமலையில் வேட்பாளராக நிறுத்தப்பட்டீர்கள். இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூர் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் திரு.அ. தங்கத்துரையாவார். இரட்டைத் தொகுதியான மூதூர் தொகுதி தனித்து 2 தொகுதிகளாக மூதூர், சேருவல என பிரிக்கப்பட்டபோது திருகோணமலைத் தொகுதிக்கு நியமிக்கப்படவிருந்தும் அவர் நியமிக்கப்படாதது இன்றுவரை ஒரு மர்மம். தற்போதைய மூதூர்த் தொகுதி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதியாகும். அதேபோல சேருவில சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதியாகும்.

60வருட அரசியல் வாழ்வில் 48ஆண்டுகள் கூட்டணியில் இருந்து வருகிறேன். ஆனால் நீங்கள் மிகமுக்கியமான கட்டத்தில் 2004ஆம் ஆண்டு கூட்டணியை விட்டு விலகி வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டீர்கள். எனக்குத் தெரிந்த மட்டில் தமிழரசுக் கட்சி தமிழ்க. காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்ததுடன் தமிழரசுக்கட்சி செயலிழக்கப்பட்டது. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களின் கூற்றுப்படி தனது கணவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருந்து கொண்டே தமிழரசுக் கட்சியை வேறு எவரும் துஷ்ப்பிரயோகம் செய்யக் கூடாது என்பதற்காகப் பதிவில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக்கட்சி முழுக்க முழுக்க அகிம்சையைக் கொள்கையாகக் கொண்ட கட்சியாகும். மிகவும் பிரபல்யமான விடுதலைப் புலிகள் சார்பான ஊடகவியலாளர் தராகி என அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராம் மிகத் தெளிவாக தமிழரசுக் கட்சியின் பதிவு வெற்றுப் பத்திரிகையில் மட்டும் தான் எனக் கூறியிருந்தார்.

நீங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை விடுதலைப் புலிகளின் அரசியல் அங்கமாக சேர்க்க பெரும் பிரயத்தனம் செய்தீர்கள். அதற்கு நான் சம்மதிக்காது இந்த வாய்ப்பை உபயோகித்து – விடுதலைப் புலிகளை நியமித்தால் அவர்கள் ஜனநாயகப் பாதைக்கு திரும்புவதற்கு உதவும் எனக் கருதினேன். எனது ஆலோசனைக்கு திருப்தியடையாத நீங்கள் எவருக்கும் தெரிவிக்காமல் தமிழர் விடுதலைக் கூட்டணியை விட்டுவிலகி மாவை. சேனாதிராஜாவுடைய சாதுரியத்தால் தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டீர்கள். நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தவுடன் விடுதலைப் புலிகளின் சார்பில் நியமனப்பத்திரம் தாக்கல்செய்யப்படுகிறதென அறிவித்தீர்கள். கலந்தாலோசிக்காது நீங்கள் கட்சியைவிட்டுப் போனமையால் எங்களுக்கு வேறு வழியின்றி சுயேச்சையாகப் போட்டியிட்டோம். அதன்பின் உங்களுடைய குழு வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் அரசியற்குழுத் தலைவர் சு.ப. தமிழ்செல்வனுடைய அனுசரணையுடன் விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் தேசியத் தலைமையாகவும், ஏகப்பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியீட்டிருந்தீர்கள்.

உதயசூரியன் சின்னத்தை நான் கொண்டு ஓடிவிட்டேன் என்று வெளிநாட்டிலுள்ள புலிகளின் ஆதரவாளர்களால் குற்றம் சுமத்தப்பட்டேன். ஆனால் கூட்டணியை இயங்கவிடாமல் செய்து உதயசூரியன் சின்னத்தை குழிதோண்டிப் புதைத்தவர் நீங்களே!

2004 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 22ஆசனங்களை எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். காலையில் தோல்வியாக இருந்த சேனாதிராசா மாலையில் எவ்வாறு வெற்றிபெற்றார் என்பது உண்மையில்லையா? இன்னும் ஒருவேட்பாளர் இலங்கைத் தேர்தல் வரலாற்றில் எவருக்கும் கிடைக்காதளவு 115,000 வாக்குகளைப் பெற்றார். வேறு கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்தல் உட்பட ஏனைய பிரச்சாரங்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தக் குறைபாடுகளுடன் 22 ஆசனங்களில் வெற்றிபெற்று நாடாளுமன்றத்தின் முழுக் காலம் 6 வருடமும் வசதியாக பதவியை அனுபவித்தீர்கள்! உங்களுடைய தெரிவும், ஏனையோரின் தெரிவும் மோசடி மூலமானவை என்பதை நீங்கள் அறிவீர்கள்! நாடாளுமன்றப் படிகள் ஏறுவதற்கு உங்களுக்குத் தார்மீக உரிமை கிடையாது. நீங்கள் விடுதலைப்புலிகள் சார்பாக போட்டியிடுவதாக ஏற்கனவே தெரிவித்து விட்டீர்கள்.

ஆகவே உங்களுடைய பட்டியலில் தெரிவானவர்கள் அத்தனைபேரும் விடுதலைப் புலிகளின் வேட்பாளராக கணிக்கப்பட்டனர். ஆகவே எல்லா வேட்பாளர்களும் உதயரியன் சின்னத்தில் ஒரே கட்சியின்கீழ் போட்டியிட்டு ஜனநாயக கோட்பாடுகளுக்கு திரும்ப இருந்தவேளை நீங்கள் திட்டமிட்டு விடுதலைப் புலிகள் ஜனநாயகத்திற்கு திரும்புவதை தடுத்துள்ளீர்கள். இந்தமுடிவு விடுதலைப் புலிகளுடையதே என்பதை தராகி வெளிப்படையாக கூறியிருந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

எல்லா அமைப்புக்களையும், பலவிதமான முயற்சிகள் எடுத்து ஒரு கொடியின் கீழ் கொண்டுவருவது மிகப்பெரிய சவாலாகும். இந்த வழியில் செல்லவிடாமல் உங்கள் முட்டாள்தனமான முடிவின் பயனே 5 ஆண்டுகள் 2004 – 2009 வரை யுத்தத்தை நீடிக்க வழிவகுத்தது. இதன்விளைவாக பல உயிர்கள் பலியாகியமையும், பல்லாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததும் உங்களுக்குத் தெரியாததா? இவர்களில் எவருக்கேனும் ஒரு ஆறுதல் வார்த்தையேனும் கூறினீர்களா? – எனவும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதல் உதவித் திட்ட நிகழ்வு மருதங்கேணியில்





வடமராட்சியில் மருதங்கேணிப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

தமிழ் மக்கள் நம்பிக்கைப் பொறுப்பு என்ற நிதியத்தின் முதலாவது திட்ட நிகழ்வாக இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் ஆலய நிதி அனுசரணையுடன் இந்த உதவி வழங்கல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் வண. இமானுவேல் இரவிச்சந்திரன், சிவஸ்ரீ சபாரட்ணசர்மா வாசுதேவ சர்மா, பேராசிரியர் வி.பி. சிவநாதன், ஓய்வு நிலை அதிபர் க. அருந்தவபாலன், வைத்தியர் சி. சிவன்சுதன். சட்டத்தரணி திருமதி சு.சிவரூபவதி, கட்டடக்கலைஞர் த.சிற்பரன் மற்றும் ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர் திரு.க. இராஜதுரை ஆகியோரின் அங்கத்துவத்துடன் இந்த நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசுக்கு சுவிஸ் எச்சரிக்கை!

## தூதரகப் பணியாளர் கைதினால் கொதிப்பு

கொழும்பு, டிசெ. 18

கடத்தப்பட்டுத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சுவிஸ் தூதரக ஊழியர் விடயத்தில் இலங்கை நடந்து கொண்ட விதம் தொடர்பாக, சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் கடுமையான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.



கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் ஊழியர் ஒருவர் தவறான அறிக்கைகளை வெளியிட்டார் எனக் கூறிக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டமையை அடுத்து இந்த எச்சரிக்கை வந்துள்ளது.

சுவிற்சர்லாந்தில் உள்ள மத்திய வெளியுறவுத் துறை, பணியாளர் தொடர்பான எந்தவொரு நடவடிக்கையிலும் தேசிய சட்டம் மற்றும் சர்வதேசத் தரங்களுக்கு அமைய தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாப்பதை உறுதி செய்யுமாறு இலங்கை நீதித்துறை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வெளியுறவுத் துறை மற்றும் கொழும்பு சுவிஸ் தூதரகம் தங்கள் பொறுப்புகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஊழியருக்கு உதவத் தங்கள் சக்தியால் முடிந்த அனைத்தையும் செய்யும் எனவும் கூறப்பட்டுள்ளது.

நவம்பர் 25, 2019 அன்று, சுவிஸ் தூதரகத்தின் உள்ளூர் ஊழியர் தூதரகம் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு தான் கட்டாயப்படுத்திக் கொழும்பில் கடத்தப்பட்டார் எனத் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பணியாளர் மற்றும் சுவிஸ் தூதரகம் இருதரப்பும் இந்த நடவடிக்கைகளின்போது இலங்கை அதிகாரிகளுடன் முழுமையாக ஒத்துழைத்தனர்.

சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் பலமுறை உரிய செயல்முறை பின்பற்றப்படவேண்டும் என்று அழைப்பு விடுத்தது. குறிப்பாக, உடல் நலம் சரியில்லாமல் இருந்தபோதும், மூன்று நாள்களுக்கு மேலாக ஊழியர் 30 மணி நேர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமையை சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் விமர் சித்துள்ளது.

தமது ஊழியர் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, இலங்கை சட்ட அமுலாக்க அதிகாரிகள் தேசிய சட்டம் மற்றும் சர்வதேச நீதித் தரங்களுக்கு இணங்க வேண்டும் என்றும் பணியாளரின் உரிமைகள் இப்போது சிறப் பாக பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யப்பட வேண்டும் என்றும் சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக் களம் எதிர்பார்க்கிறது.

பொருந்தக்கூடிய சட்டத்தின் கீழ் தங்கள் கடமைகளைப் பூர்த்தி செய்யவும், பணியாளரின் மோசமான உடல்நிலைக்கு உரிய கவனம் செலுத்தவும் இலங்கை அதிகாரிகளை சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் அழைப்பு விடுக்கிறது.

இந்த உயர் வழக்கில் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் ஒரு நாடு என்ற இலங்கையின் நற்பெயருக்கு ஆபத்து உள்ளது என்பதை சுவிற்சர்லாந்து வலியுறுத்த விரும்புகிறது.

கொழும்பில் உள்ள சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் மற்றும் சுவிஸ் தூதரகம் முடிந்தவரை தங்கள் ஊழியருக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும்.

இந்தச் சம்பவத்தைத் தீர்க்க ஒரு பொதுவான மற்றும் ஆக்கபூர்வமான வழியை நாடுகிறோம் என்று இலங்கை அதிகாரிகளுக்கு சுவிஸ் மத்திய வெளிவிவகாரத் திணைக்களம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 16ஆம் திகதி கொழும்பில் உள்ள சுவிஸ் தூதர் இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபயவுடனான நேருக்கு நேர் சந்திப்பில் இதை மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், டிச.17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை -**

**யாழ் பிரதேசத்தில் -**

உடுப்பிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, கம்பர்மலை பாரதிதாசன், பழைய பொலிஸ் நிலையம், வல்வெட்டித்துறை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

மாங்குளம் குடியிருப்பு, பனிக்கங்குளம், கிழவன்குளம், CATIC ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, கணேசபுரம் கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், செட்டிக்குளம் நகரம், ஒட்டறுத்தகுளம், பம்பைமடுவிலிருந்து பிரமணாளங்குளம் வரை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம் ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# பாண் விலை குறையும்!

கொழும்பு, டிசெ.18

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா மீதான ஒருங்கிணைந்த வரியைக் குறைக்க அரசு எடுத்த முடிவை அனைத்து இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் பாராட்டியுள்ளது.

அத்துடன், ஒரு இறாத்தல் பாணின் விலையை 50 ரூபா வரை குறைக்க முடியும் என்றும் அது தெரிவித்துள்ளது.



அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் புதிய கோதுமை மா நாட்டுக்கு வரும் என்றும், அதன் பிறகு பேக்கரி பொருள்களின் விலை குறைப்பு நடைமுறைக்கு வரும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# வடக்கு ஆளுநராக திருமதி சார்ள்ஸ்



கொழும்பு, டிசெ. 18

வடக்கு மாகாண ஆளுநராக திரு மதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் நியமிக்கப்படவுள்ளார்.

ஆளுநராக அவரை நியமிப்பது தொடர்பில் பேச்சு நடத்துகிறோம். அவர் விரும்பினால் ஆளுநராக நியமிக்க இருக்கிறோம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சந்திப்பின் போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர், வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் வேலை செய்ய முடியாதெனப் பெரும் பாலானவர்கள் பதவியைப் பொறுப் பேற்க விரும்புகிறார்கள் இல்லை. என்றாலும், சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான திருமதி சார்ள்ஸை ஆளுநராக நியமிப்பதற்கே முடிவு செய்துள்ளோம் - என்றார். (ஐ)

# சங்கிலி அறுத்தவர்களை மடக்கிப்பிடித்த மக்கள்!

வவுனியா – பாலமோட்டைப் பகுதியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்ற மூன்று பேரை பொதுமக்கள் துரத்திப் பிடித்து நையப்புடைத்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணியளவில் வலயன்கட்டு பரிசங்குளம் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச்சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அபகரித்துக் கொண்டு கோயில் குஞ்சுக்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது அப்பகுதி இளைஞர்களாலும், பொதுமக்களாலும் துரத்திப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டனர்.

சங்கிலி அபகரித்துச் சென்ற நபர்கள் ஆண்டியா புளியங்குளத்தைச் சேர்ந்த முஸ்லிம் நபர்கள் எனவும், பரிசங்குளம் பகுதிக்கு மேசன் வேலைக்காக வந்தவர்கள் எனவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. பொதுமக்களால் பிடிக்கப்பட்ட இருவரும் ஓமந்தைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

தப்பித்து சென்ற நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேலதிக விசாரணைகளையும் ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)











யாழ்ப்பாணம், டிசெ.18

'தாயகம்' அறக்கொடை நிறுவனத்தினின் ஏற்பாட்டில் வன்னியில் உள்ள விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 180 பாடசாலைச் சீருடைத் துணிகள், பாடசாலைக்கு அணிவதற்கான 180 காலணிகள் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி சுகாதாரப் பணிமனை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

அறக்கொடை ஸ்தாபகரும் நிர்வாகியுமான தொழிலதிபர் வீ.ஸ்ரீதரன் தம்பதியரும் படத்தில் காணப்படுகின்றனர்.